இரண்டாவது வாசகத்தைப் பொருத்தவரையில், ஒரு கிறிஸ்தவன் பாவம் செய்வதற்குத் திரும்புவதின்மூலம் தேவனுடைய *ஒப்புதலளிக்கும் அன்பை* இழந்துபோகலாம். அப்போது அவன் தேவனுடைய *இரக்கமுள்ள அன்பை* மட்டுமே அனுபவிக்கக் கூடியவனாக ஆகிறான். ஒரு அவிசுவாசி மரித்துப்போனால், தேவன் அவன்மீது கொண்டிருந்த ஒரே அன்பாகிய *இரக்கமுள்ள அன்பை* இழந்துபோகலாம்.

மூன்றாவது வாசகத்தைப் பொருத்தவரையில், தேவனுடைய *ஒப்புதலளிக்கும் அன்பு* நிபந்தனைக்கு உட்பட்டதாகும். அவருடைய *இரக்கமுள்ள அன்பும்* ஒருவன் சரீரப்பிரகாரமாக உயிரோடிருக்கும் வரை மட்டுமே காட்டப்படுவதால் அதுவும் நிபந்தனைக்கு உட்பட்டதாகும். மரணத்துக்குப் பின்னர் தேவனுடைய *இரக்கமுள்ள அன்பு* காட்டப்படாத படியால் அது தாற்காலிகமானது, எனவே நிபந்தனைக்குட்பட்டது.

நான்காவதாக, தேவன் எல்லோரிடமும் எல்லா வேளைகளிலும் ஒரே அன்பைக் காட்டுவதில்லை. பரிசுத்தவான்களானாலும் சரி, பாவிகளானாலும் சரி, வெவ்வேறு அளவுகளில் அவர் ஒப்புதலளிக்கிறார், ஒப்புதலளிக்காமல் இருக்கிறார். பாவிகளுக்கும், பரிசுத்தவான்களுக்கும் காட்டப்படும் அன்பு ஒன்றுபோலானது அல்ல என்பது உண்மையாகும்.

ஐந்தாவதாக, தேவன் பாவிகளையும் அவர்களின் பாவங்களையும் வெறுக்கிறார். அவர் பாவிகளை *இரக்கமுள்ள அன்பினால்* நேசிக்கிறார், அவர்களுடைய பாவங்களை வெறுக்கிறார். அவருடைய *ஒப்புதலளிக்கும் அன்பின்* அடிப்படையில் அவர் அவர்களை வெறுக்கிறார்.

ஆறாவதாக, எவரும் தேவனுடைய *ஒப்புதலளிக்கும் அன்பைச்* சம்பாதித்துக்கொள்ள முடியும், சம்பாதித்துக்கொள்ள வேண்டும். அவருடைய *இரக்கமுள்ள அன்பு* நிபந்தனையில்லாததினால் அதை எவராலும் சம்பாதித்துக்கொள்ள முடியாது.

ஏழாவதாக, தேவனுடைய *இரக்கமுள்ள அன்பு* கிரியைகளைச் சார்ந்திருக்கவில்லை, ஆனால் *ஒப்புதலளிக்கும் அன்பு* செயல்களைச் சார்ந்திருக்கிறது.

சீஷர்களை உருவாக்கும் ஊழியர் எவரும் ஏமாற்றப்படுவதை விரும்பாதபடியால், வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளபடி, தேவனுடைய அன்பைக் குறித்துச் சரியாகப் பிரசங்கிக்க வேண்டும். தேவனால் *ஒப்புதலளிக்கும் அன்போடு* நேசிக்கப்படுபவர்கள் மட்டுமே பரலோகத்துக்குச் செல்ல முடியும். மறுபடியும் பிறந்து, இயேசுவுக்குக் கீழ்ப்படிகிறவர்களை மட்டுமே தேவன் *ஒப்புதலளிக்கும் அன்பினால்* நேசிக்கிறார். மக்களைப் பரிசுத்தத்தை விட்டு விலகச் செய்யும் எதையும் சீஷர்களை உருவாக்கும் ஊழியர் போதிக்கக் கூடாது. கிறிஸ்துவின் எல்லாக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படியும் சீஷர்களை உருவாக்க வேண்டும் என்பதே அவருடைய இலக்காகும்.



# 7

# வேதாகமத்துக்கு அர்த்தம்காணுதல்

பவுல் தீமோத்தேயுவுக்கு இவ்வாறு எழுதியிருக்கிறார்:

> *உன்னைக் குறித்தும் உபதேசத்தைக் குறித்தும்* எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலைகொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக் கொள்ளுவாய் (1 தீமோ. 4:16 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

எல்லா ஊழியரும் இந்த எச்சரிப்பை மனதில் ஏற்றுக்கொள்ள வேண்டும். முதலில் *தன்மீது* அதிக கவனத்தைச் செலுத்த வேண்டும். தான் தேவனுக்கடுத்த முன்மாதிரியாக இருக்கிறேனா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, அவர் தனது போதனையைக் குறித்து அதிகக் கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால், பவுல் மேலேயுள்ள வசனத்தில் குறிப்பிட்டதுபோல, அவருடைய சொந்த இரட்சிப்பும் அவருடைய பேச்சைக் கேட்பவர்களின் இரட்சிப்பும் அவர் எதைப் போதிக்கிறாரோ அதைச் சார்ந்திருக்கிறது.[29] ஒரு ஊழியர் தவறான கோட்பாட்டை ஏற்றுக்கொண்டாலோ அல்லது மக்களுக்குச் சத்தியத்தைச் சொல்லுவதைப் புறக்கணித்தாலோ அது அவருக்கும் மற்றவர்களுக்கும் நித்திய அழிவைக் கொண்டுவரும்.

*சீஷரை* உருவாக்கும் ஊழியர் பொய்யான உபதேசத்தைப் போதிப்பதைக் குறித்துச் சாக்குப்போக்குச் சொல்ல முடியாது. ஏனென்றால் அவரைச் சத்தியத்துக்குள் வழிநடத்த தேவன் தமது

[29] பவுல் நிபந்தனையில்லாத நித்திய பாதுகாப்பில் நம்பிக்கை கொண்டிருக்க வில்லை என்பது தெளிவாகிறது. இல்லாவிட்டால், இரட்சிக்கப்பட்ட நபராகிய தீமோத்தேயுவிடம் தனது இரட்சிப்பைக் காப்பாற்றிக்கொள்ள அவர் எதையாவது செய்ய வேண்டியிருக்கிறது என்று சொல்லியிருக்க மாட்டார்.

பரிசுத்த ஆவியானவரையும், தமது வார்த்தையையும் கொடுத்திருக்கிறார். ஆனால் தவறான செயல்நோக்கங்களைக் கொண்டவர்கள் தேவனுடைய வார்த்தையைத் தாங்கள் படிக்காமல், மற்றவர்களின் பிரபலமான போதனைகளைப் போதிக்கிறபடியினால்தான் தங்கள் கோட்பாட்டிலும் போதனையிலும் பிழை செய்கிறார்கள். இதற்கு எதிராகத் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டுமானால், ஊழியர் தனது இருதயத்தைப் பரிசுத்தமாக்கி, தனிப்பட்ட முறையில் செல்வத்தைப் பெறுவதோ, அதிகாரத்தையோ அல்லது புகழையோ பெறுவதோ தனது செயல்நோக்கமாக இராமல், 1] தேவனைப் பிரியப்படுத்துவதும், 2] இயேசுவுக்கு முன்பாக நிற்க மக்களை ஆயத்தப்படுத்துவதுமே தனது செயல்நோக்கமாக இருக்கும்படி காத்துக்கொள்ள வேண்டும். தேவனுடைய வார்த்தையைக் குறித்த முழுவதும், சமநிலையானதுமான அறிவைப் பெறும்படி அதை ஒழுங்காக ஆய்வுசெய்ய வேண்டும். பவுல் தீமோத்தேயுவுக்கு இவ்வாறு எழுதியிருக்கிறார்:

> நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு [2 தீமோ. 2:15].

தேவனுடைய வார்த்தையை வாசித்து, ஆய்வுசெய்து, தியானிப்பது ஒரு ஊழியர் எப்போதுமே செயல்படுத்தும் ஒழுங்காக இருக்க வேண்டும். அவர் ஊக்கமாகப் படிக்கும்போது பரிசுத்த ஆவியானவர் அவர் தேவனுடைய வார்த்தையைப் புரிந்துகொள்ளும்படி உதவிசெய்வார். ''சத்தியவசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கும்படி'' உதவி செய்வார். ஊழியர்கள் தேவனுடைய வார்த்தைக்குத் தவறாக அர்த்தம் சொல்லுவதே இன்று சபையில் மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கிறது. இதன்மூலம் அவர்கள் தங்களுடைய மக்களைத் தவறாக வழிநடத்துகிறார்கள். இது தீவிரமான காரியமாகும். யாக்கோபு இப்படி எச்சரித்திருக்கிறார்:

> என் சகோதரரே, அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக [யாக். 3:1].

இதன்காரணமாக, சீஷர்களை உருவாக்கும் ஊழியர் தேவனுடைய வார்த்தைக்கு எப்படி அர்த்தம்காணுவது என்பதை அறிந்திருக்க வேண்டும். எந்தவொரு குறிப்பிட்ட வேதாகமப் பகுதியின் நோக்கமான அர்த்தத்தை மிகச் சரியாகப் புரிந்துகொண்டு, அதை அறிவிப்பதே அவருடைய இலக்காக இருக்க வேண்டும்.

மற்றொருவருடைய வார்த்தைகளுக்குச் சரியாக அர்த்தம் காணுவதுபோலவே தேவனுடைய வார்த்தைக்கும் சரியான அர்த்தம்





காணப்படுகிறது. எந்தவொரு பேச்சாளர் நோக்கம் கொண்டுள்ள அர்த்தத்தைச் சரியாகப் புரிந்துகொள்ள நாம் விரும்புவோமானால், அர்த்தம் காணுதல் குறித்த சில விதிகளைச் செயல்படுத்த வேண்டும். இந்த விதிகள் பொதுஅறிவை அடிப்படையாகக் கொண்டவையாகும். இந்த அத்தியாயத்தில் வேதாகமத்துக்கு அர்த்தம் காணுதல்குறித்த மூன்று மிக முக்கியமான விதிகளைப்பற்றிப் பார்க்கப்போகிறோம். அவையே: *1] அறிவுபூர்வமாக வாசித்தல், 2] பின்னணியோடு வாசித்தல், 3] நேர்மையோடு வாசித்தல்* என்பவையாகும்.

**விதி # 1: அறிவுபூர்வமாக வாசித்தல். அந்தப் பகுதியை உருவகமாகவோ அல்லது அடையாளரீதியாகவோ எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது தெளிவாகத் தெரியாவிட்டால், வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் காணுங்கள்.**

எல்லா இலக்கியத்தையும்போலவே வேதாமத்திலும் சொல்லணிகள் இருக்கின்றன: *உருவகங்கள், உயர்வுநவிற்சி, தேவனுக்கு மனிதப்பண்பு அளித்தல்.* இவைகளை அப்படியாகவே எடுத்துக் கொள்ள வேண்டும்.

*உருவகம்* என்பது அடிப்டையில் இரண்டு வெவ்வேறான காரியங்களுக்கு இடையேயுள்ள ஒற்றுமைகளை ஒப்பிட்டுக் கூறுவதாகும். வேதாகமத்தில் பல உருவகங்கள் இருக்கின்றன. கடைசி இராப்போஜனத்தின்போது இயேசுவானவர் சொன்ன வார்த்தைகளில் ஒரு உருவகத்தைக் காணலாம்:

> அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள். இது பாவமன்னிப்புண்டாகும்படி, அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக் குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது [மத். 26:26–28].

இயேசுவானவர் தமது சீஷர்களுக்குத் தாம் கொடுக்கும் அப்பம் அவருடைய சரீரம் என்றும், இரசம் அவருடைய இரத்தம் என்றும் நாம் *வார்த்தைக்கு வார்த்தை* அப்படியே எடுத்துக்கொள்ள வேண்டுமா? பொது அறிவு *அப்படியில்லை* என்று சொல்லுகிறது. இயேசுவானவர் அவர்களுக்கு அப்பத்தையும் திராட்சரசத்தையும் மட்டுமே கொடுத்தார் என்று வேதவசனம் தெளிவாகக் கூறுகிறது. அது அப்படியே அவருடைய சரீரமாகவும், இரத்தமாகவும் மாறுகிறது என்று எந்த

இடத்திலும் சொல்லப்படவில்லை. கடைசி இராப்போஜனத்தில் கலந்து கொண்ட பேதுருவோ அல்லது யோவானோ அப்படி ஒரு காரியம் நடந்ததாகத் தங்கள் நிருபங்களில் குறிப்பிடவில்லை. சீஷர்கள் எந்தக் காலத்திலும் மாம்சபட்சணிகளாக இருந்ததில்லை!

‘‘ஆனால் இயேசுவானவர் அந்த அப்பமும் இரசமும், தம்முடைய சரீரமும், இரத்தமுமாயிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். நான் இயேசு சொன்னதை விசுவாசிக்கப் போகிறேன்’’ என்று விவாதிக்கலாம்.

இயேசுவானவர் தாம் வாசலாக இருப்பதாகவும் சொல்லியிருக்கிறார் [பார்க்க, யோவான் 10:9]. அவர் கைப்பிடியும், கீல்களும் கொண்ட வாசலாக உண்மையிலேயே மாறிவிடுகிறாரா? ஓரிடத்தில் தாம் திராட்சச் செடி என்றும் நாம் கொடிகள் என்றும் இயேசுவானவர் சொல்லியிருக்கிறார் [பார்க்க, யோவான் 15:5]. இயேசுவானவர் உண்மையிலேயே ஒரு திராட்சச் செடியாக மாறிவிட்டாரா? நாம் உண்மையிலேயே திராட்சக் கொடிகளாக மாறிவிட்டோமா? தாம் உலகத்துக்கு வெளிச்சமாயிருப்பதாகவும், வானத்திலிருந்திறங்கிய அப்பமாயிருப்பதாகவும் சொல்லியிருக்கிறார் [பார்க்க, யோவான் 9:5; 6:41]. அப்படியானால் இயேசு சூரிய ஒளியாகவும், அப்பமாகவும் இருக்கிறாரா?

இவையெல்லாமே *உருவகம்* என்னப்படும் சொல்லணி என்பது தெளிவாகத் தெரிகிறது. உருவகம் என்பது அடிப்படையில் வெவ்வேறானவைகளாக இருந்தாலும் ஓரளவு ஒற்றுமை கொண்ட இரண்டு காரியங்களை ஒப்பிடுவதாகும். சில வழிகளில் இயேசு வாசலைப்*போலவும்*, திராட்சச் செடியைப் *போலவும்* இருந்தார். கடைசி இராப்போஜனத்தின்போது இயேசுவானவர் சொல்லிய வாசகங்களும் உருவகங்களேயாகும். திராட்சரசம் அவருடைய இரத்தத்தைப் *போல* இருந்தது [சில வழிகளில்]. அப்பம் அவருடைய சரீரத்தைப் *போல* இருந்தது [சில வழிகளில்].

### கிறிஸ்துவின் உவமைக்கதைகள்

கிறிஸ்துவின் உவமைக்கதைகள் *உவமைகள்* ஆகும். இவை உருவகங்களைப்போல இருந்தாலும், உவமைகளில் எப்போதுமே *போல, எனவே* போன்ற சொற்கள் காணப்படுகின்றன. சாரம்சமாக ஒன்றுக்கொன்று வேறுபட்டிருக்கும் இரண்டு காரியங்களுக்கிடையேயுள்ள ஒற்றுமைகளை ஒப்பிட்டு இவை ஆவிக்குரிய பாடங்களைப் போதிக்கின்றன. இவைகளுக்கு அர்த்தம் காணும்போது நாம் ஒரு முக்கியமான காரியத்தை நினைவில் வைத்திருக்க வேண்டும். இல்லையென்றால் ஒவ்வொரு உவமைக்கதையிலும் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சிறிய விவரங்களுக்கும் நாம் முக்கியத்துவம் கொடுக்கத் தலைப்படுவோம். உருவகங்களும், உவமைகளும்





எப்போதுமே ஒற்றுமைகள் மறைந்து வேற்றுமைகள் துவங்கும் இடத்துக்கு வரும். எடுத்துக்காட்டாக, நான் என் மனைவியிடம் ‘‘உன் கண்கள் ஆழ்கடலைப்போல இருக்கின்றன’’ என்று சொன்னால், அவளுடைய கண்கள் நீலமாகவும், ஆழமாகவும் அழைப்புவிடுப்பவையாகவும் இருக்கின்றன என்று அர்த்தமாகும். மீன்கள் அதில் நீந்துகின்றன, பறவைகள் அந்த மீன்களைக் கொத்துகின்றன, கடும் குளிரில் நீர் உறைந்துபோகும் என்றெல்லாம் நான் சொல்லவில்லை.

நாம் இயேசுவானவரின் மூன்று உவமைகளைப் பார்ப்போம். முதலில் வலையைக் குறித்த உவமைக்கதை:

> அன்றியும், பரலோக ராஜ்யம் கடலிலே போடப்பட்டு, சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது. அது நிறைந்தபோது, அதைக் கரையில் இழுத்து, உட்கார்ந்து, நல்லவைகளைக் கூடைகளில் சேர்த்து, ஆகாதவைகளை எறிந்துபோடுவார்கள். இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும். தேவதூதர்கள் புறப்பட்டு, நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் [மத். 13:47—50].

பரலோக ராஜ்யமும் வலையும் *அடிப்படையில்* ஒன்றுபோல இருக்கின்றனவா? நிச்சயமாக இல்லை! அவை *முற்றிலும் வேறுபட்டவையாக* இருக்கின்றன. ஆனால் *ஒருசில* ஒற்றுமைகள் காணப்படுகின்றன. வலையினால் இழுக்கப்படும் மீன்கள் நிதானிக்கப்பட்டு வேண்டியவை, வேண்டாதவை என்று இரண்டாகப் பிரிக்கப்படுவதுபோல, தேவனுடைய ராஜ்யத்திலும் நடக்கும். இப்போது ஒன்றாக வாழ்ந்துகொண்டிருக்கும் நீதிமான்களும் பொல்லாதவர்களும் ஒரு நாள் பிரிக்கப்படுவார்கள். ஆனால் இதோடு ஒற்றுமைகள் முடிவடைகின்றன. *மீன்கள்* நீந்துகின்றன; *மக்கள்* நடக்கிறார்கள். *மீன்பிடிப்பவர்கள்* மீன்களைப் பிரிக்கிறார்கள், *தேவதூதர்கள்* நீதிமான்களையும் பொல்லாதவர்களையும் பிரிக்கிறார்கள். *மீன்கள்* சமைத்தபின்னர் ருசியாக இருக்குமா என்பதைக் கொண்டு தெரிந்தெடுக்கப்படுகின்றன. *மக்கள்* தேவனுக்குக் கீழ்ப்படிகிறார்களா அல்லது கீழ்ப்படியாமலிருக்கிறார்களா என்பதைக் கொண்டு நியாயந்தீர்க்கப்படுகிறார்கள். *நல்ல மீன்கள்* கூடைகளில் போடப்படுகின்றன, *மோசமான மீன்கள்* எறியப்படுகின்றன. *நீதிமான்கள்* தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறார்கள். *பொல்லாதவர்கள்* நரகத்தில் தள்ளப்படுகிறார்கள்.

ஒப்பிடப்படும் காரியங்கள் அடிப்படையில் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருப்பதால், ஒவ்வொரு உருவகமும், உவமையும் பரிபூரண

மில்லாத ஒப்பிடுதலாக இருக்கிறது என்பதற்கு இந்த உவமைக்கதை மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறது. வேற்றுமைகள் மெய்யாகவே வேற்றுமைகள் என்று எடுத்துக்கொண்டு பேசுபவரின் நோக்கத்துக்கு அப்பால் செல்ல நாம் விரும்பவில்லை. எடுத்துக் காட்டாக, ''நல்ல மீன்'' இறுதியில் சமைக்கப்படுகிறது என்றும், ''மோசமான மீன்'' நீரில் எறியப்பட்டு தொடர்ந்து வாழும் வாய்ப்பு அதற்குக் கொடுக்கப்படுகிறது என்றும் நாம் அறிவோம். ஆனால் இயேசுவானவர் இதைக் குறிப்பிடவில்லை! இது அவருடைய நோக்கத்துக்கு விரோதமானதாகும்.

ஒருசிலர் கூறுவதுபோல இந்த உவமைக்கதை ''வலைவீசிப் பிடிக்கும் சுவிசேஷ ஊழியத்தைக்'' குறித்துப் போதிக்கவில்லை. இந்த ஊழியத்தின் மூலம் வலைவீசி மீன்களை இழுப்பதுபோல, நல்லவர்களும் கெட்டவர்களும், அவர்கள் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி சபைக்குள் இழுக்கப்படுகிறார்கள். கடற்கரையே போதிப்பதற்குச் சிறந்த இடம் என்றும் இந்த உவமைக் கதை போதிக்கவில்லை. சபை எடுத்துக்கொள்ளப்படுவது உபத்திரவ காலத்தின் இறுதியில் என்றும் இந்த உவமைக்கதை நிரூபிக்கவில்லை. இந்த உவமைக்கதையில் தெரிந்துகொள்ளப்படும் மீன் அதற்காகத் தான் எதையும் செய்யாதபடியால், நமது இரட்சிப்பு முற்றிலுமாகத் தேவனுடைய ராஜரீகக் கிருபையைச் சார்ந்திருக்கிறது என்றும் இது போதிக்கவில்லை (உண்மையில் ஒரு இளம் போதகர் இப்படிப் போதித்ததை நான் கேட்டிருக்கிறேன்). இயேசுவின் உவமைக்கதை களில் அர்த்தமில்லாத முக்கியத்துவங்களைத் திணிக்காதீர்கள்!

## ஆயத்தமாக இருத்தல்

இயேசுவின் மற்றொரு உவமைக்கதையாகிய பத்துக் கன்னிகை களைக்குறித்த உவமைக்கதையைப் பார்ப்போம்:

> அப்பொழுது, பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு, மணவாளனுக்கு எதிர்கொண்டு போகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும். அவர்களில் ஐந்துபேர் புத்தியுள்ளவர் களும், ஐந்துபேர் புத்தியில்லாதவர்களுமாயிருந்தார்கள். புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக் கொண்டு போனார்கள், எண்ணெயையோ கூடக் கொண்டுபோகவில்லை. புத்தியுள்ளவர்கள் தங்கள் தீவட்டிளோடுங்கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டு போனார்கள். மணவாளன் வரத் தாமதித்தபோது, அவர்கள் எல்லாரும் நித்திரை மயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள். நடுராத்திரியிலே: இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு





> எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று. அப்பொழுது, அந்தக் கன்னிகைகள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள். புத்தியில்லாதவர்கள் புத்தியுள்ளவர்களை நோக்கி: உங்கள் எண்ணெயில் எங்களுக்குக் கொஞ்சம் கொடுங்கள், எங்கள் தீவட்டிகள் அணைந்துபோகிறதே என்றார்கள். புத்தியுள்ளவர்கள் பிரதியுத்தரமாக: அப்படியல்ல, எங்களுக்கும் உங்களுக்கும் போதாமலிராதபடி, நீங்கள் விற்கிறவர்களிடத்திற் போய், உங்களுக்காக வாங்கிக் கொள்ளுங்கள் என்றார்கள். அப்படியே அவர்கள் வாங்கப் போனபோது மணவாளன் வந்துவிட்டார்; ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடேகூடக் கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள்; கதவும் அடைக்கப் பட்டது. பின்பு, மற்றக் கன்னிகைகளும் வந்து: ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத் திறக்க வேண்டும் என்றார்கள். அதற்கு அவர்: உங்களை அறியேன் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள் (மத். 25:1–13).

இந்த உவமைக்கதை போதிக்கும் அடிப்படைப் பாடம் என்ன? இறுதி வாக்கியத்தில் அது காணப்படுகிறது: *ஆண்டவருடைய வருகைக் காகக் காத்திருங்கள், ஏனென்றால் நீங்கள் எதிர்பார்க்கிறதைவிட அவர் அதிகம் தாமதிக்கலாம்*. அவ்வளவுதான்!

நான் ஏற்கெனவே முந்தைய அத்தியாயத்தில் குறிப்பிட்டபடி, இயேசுவானவர் இந்த உவமைக்கதையைத் தெரிந்தெடுக்கப்பட்ட சீஷர் சிலருக்குக் கூறினார் (பார்க்க, மத். 24:3; மாற்கு 13:3). அந்த வேளையில் இவர்கள் கீழ்ப்படிதலுடன் அவரைப் பின்பற்றிக்கொண்டி ருந்தார்கள். இயேசுவானவர் திரும்பிவரும்போது, பேதுருவும், யாக்கோபும், யோவானும், அந்திரேயாவும்கூட ஆயத்தமில்லாமல் இருக்கக் கூடும் என்ற உண்மையே இந்த உவமைக்கதையில் சுட்டிக் காட்டப்படுகிறது. எனவேதான் இயேசுவானவர் அவர்களுக்கு எச்சரிப்புக் கொடுத்தார். எனவே, இப்போது ஆண்டவருடைய வருகைக்காக ஆயத்தமாக இருப்பவர்கள் உண்மையில் அவர் வரும்போது ஆயத்தமில்லாமல் போகக்கூடும் என்பதையே இந்த உவமைக்கதை போதிக்கிறது. பத்துக் கன்னிகைகளும் *துவக்கத்தில்* ஆயத்தமாக இருந்தார்கள். ஆனால் அவர்களில் ஐந்து பேர் *ஆயத்தமில்லாதவர்களாக*

ஆகிவிட்டார்கள். மணவாளன் முன்கூட்டியே வந்திருப்பாரானால் பத்துப் பேரும் திருமண விருந்துக்குள் செல்ல முடிந்திருக்கும்.

ஆனால் *ஐந்து* பேர் புத்திசாலிகளாகவும், *ஐந்து* பேர் புத்தியில்லாத வர்களாகவும் இருப்பதின் முக்கியத்துவம் என்ன? இப்போது அறிக்கையிடும் விசுவாசிகளாக இருப்பவர்களில் பாதிப்பேர் மட்டுமே கிறிஸ்து வரும்போது ஆயத்தமாக இருப்பார்கள் என்பதை இது குறிக்குமா? நிச்சயமாக இல்லை!

எண்ணெயின் முக்கியத்துவம் என்ன? அது பரிசுத்த ஆவியான வரைக் குறிக்கிறதா? இல்லை. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ் நானத்தைப் பெற்றவர்கள் மட்டுமே பரலோகத்துக்குள் பிரவேசிப்பார்கள் என்பதை இது காட்டுகிறதா? இல்லை.

மணவாளன் நள்ளிரவில் வருகிறபடியால் இயேசுவானவர் நள்ளிரவில் திரும்பிவருவார் என்பதை இது காட்டுகிறதா? இல்லை.

ஏன் மணவாளன் கதவைத் தட்டிக்கொண்டிருப்பவர்களை அடையாளம் காட்டும்படி புத்தியுள்ள கன்னிகைகளிடம் கேட்க வில்லை? மூடத்தனமானவர்களை அடையாளம் காட்டும்படி மணவாளன் ஞானமுள்ளவர்களிடம் கேட்டிருந்தால் அது இந்த உவமைக்கதையின் முழுக்கருத்தையும் பாழாக்கிவிட்டிருக்கும். ஏனென்றால் மூடத்தனமானவர்களும் இறுதியில் உள்ளே நுழைந்திருப் பார்கள்.

*ஒருவேளை* இப்படிச் சொல்லலாம்: புத்தியில்லாத கன்னிகைகள் வெளிச்சம் இல்லாமல் உறங்கச் சென்றுவிட்டதுபோல, புத்தியில்லாத விசுவாசிகள் ஆவிக்குரிய அந்தகாரத்தில் நடக்கத் துவங்கி, ஆவிக்குரிய பிரகாரமாக உறங்கிப்போகிறார்கள். *ஒருவேளை* இந்த மணவாளனின் திருமண விருந்துக்கும், பின்னால் வரும் ஆட்டுக்குட்டியானவரின் திருமண விருந்துக்கும் இடையில் ஒற்றுமைகளைக் காணலாம். இந்த உவமைக்கதையின்மீதும் அதிலுள்ள விவரங்களின்மீதும் பலவந்தமாக அர்த்தத்தைத் திணிக்காமல் இதற்கு மேலாகச் செல்ல முடியாது.

### கனிகொடுத்தல்

கோதுமை மற்றும் களைகளைக் குறித்த உவமைக்கதைக்கு ஒருவரால் கொடுக்கப்பட்ட விளக்கத்தைவிட மிக மோசமான அர்த்தம் காணுதலை நான் இதுவரை பார்த்தது கிடையாது. முதலில் இந்த உவமைக்கதையை வாசிப்போம்:

> வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்; பரலோக ராஜ்யம் தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது. மனுஷர் நித்திரைபண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப்





> போனான். பயிரானது வளர்ந்து கதிர்விட்டபோது, களைகளும் காணப்பட்டது. வீட்டெஜமானுடைய வேலைக்காரர் அவனிடத்தில் வந்து: ஆண்டவனே, நீர் உமது நிலத்தில் நல்ல விதையை விதைத்தீர் அல்லவா? பின்னை அதில் களைகள் எப்படி உண்டானது என்றார்கள். அதற்கு அவன்: சத்துரு அதைச் செய்தான் என்றான். அப்பொழுது வேலைக் காரர்: நாங்கள் போய் அவைகளைப் பிடுங்கிப் போட உமக்குச் சித்தமா? என்று கேட்டார்கள். அதற்கு அவன்: வேண்டாம், களைகளைப் பிடுங்கும்போது நீங்கள் கோதுமையையுங்கூட வேரோடே பிடுங்காத படிக்கு, இரண்டையும் அறுப்புமட்டும் வளரவிடுங்கள். அறுப்புக்காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி: முதலாவது, களைகளைப் பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள்; கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்துவையுங் கள் என்பேன் என்று சொன்னான் என்றார் (மத். 13:24–30).

இப்போது ஒரு பிரசங்கியாரின் விளக்கத்தைப் பாருங்கள்:

> கோதுமையும் களைகளும் முளைக்கும்போது அவை பார்ப்பதற்கு ஒன்றுபோல இருக்கின்றன என்பது உண்மையாகும். எது கோதுமை, எது களை என்று எவராலும் சொல்ல முடியாது. உலகத்திலும் சபையிலும் இப்படித்தான் இருக்கிறது. யார் மெய்யான கிறிஸ்தவர் கள் யார் அவிசுவாசிகள் என்று எவராலும் சொல்ல முடியாது. அவர்கள் தங்கள் வாழ்க்கையை எப்படி வாழுகிறார்கள் என்பதைக் கொண்டும் கண்டுபிடிக்க முடியாது. ஏனென்றால், பல கிறிஸ்தவர்கள் அவிசுவாசி களைப்போலக் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவது கிடையாது. தேவன் மட்டுமே அவர்களுடைய இருதயங்களை அறிவார், இறுதியில் அவரே அவர்களைப் பிரிப்பார்.

உண்மையில், இது கோதுமை மற்றும் களைகளின் உவமைக் கதை சொல்லும் கருத்து கிடையாது! உண்மையில் விசுவாசிகளை அவிசுவாசிகளிலிருந்து தெளிவாகப் பிரித்துக் காண முடியும் என்றே இது போதிக்கிறது. ‘‘பயிரானது வளர்ந்து கதிர்விட்டபோது, களைகளும் காணப்பட்டது’’ என்பதை வேலைக்காரர் கண்டுபிடித்தார்கள் (பார்க்க, வச. 26). களைகள் கதிர்விடாதபடியால், கனிகொடுக்காதபடியால், அவை களைகளே என்பதை மிக எளிதாகத் தெரிந்துகொள்ள முடிந்தது. இயேசுவானவர் கனிகொடுக்காத களைகளின்மூலம் தீயவர்களைக்

குறிப்பிட்டார் என்பது தெளிவாகிறது. இறுதியில் அவர்கள் சேகரிக்கப்பட்டு, நரகத்தில் போடப்படுவார்கள்.

இந்த உவமைக்கதையின் கருத்துக்கள் தெளிவாக இருக்கின்றன: *மெய்யாகவே இரட்சிக்கப்பட்டவர்கள் கனிகொடுக்கிறார்கள்; இரட்சிக்கப்படாதவர்கள் கனிகொடுப்பதில்லை. தீயவர்கள் இரட்சிக்கப்பட்டவர்களின் மத்தியில் வாழ்ந்தபோதும், இப்போது தேவன் அவர்களை நியாயந்தீர்க்கவில்லை. ஆனால் ஒருநாள் தேவன் அவர்களை நீதிமான்களைவிட்டுப் பிரித்து, நரகத்திலே தள்ளுவார்.*

இயேசுவானவர் இந்தக் குறிப்பிட்ட உவமைக்கதைக்கு விளக்கத்தையும் கொடுத்திருக்கிறார். எனவே அவர் விளக்கிச் சொல்லிருப்பதற்கு அப்பால் எவரும் முக்கியத்துவத்தைத் தேட வேண்டிய அவசியமில்லை.

> அவர் பிரதியுத்தரமாக: நல்ல விதையை விதைக்கிறவன் மனுஷகுமாரன்; நிலம் உலகம்; நல்ல விதை ராஜ்யத்தின் புத்திரர்; களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர்; அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு; அறுப்பு உலகத்தின் முடிவு; அறுக்கிறவர்கள் தேவதூதர்கள். ஆதலால், களைகளைச் சேர்த்து அக்கினியால் சுட்டெரிக்கிறதுபோல, இவ்வுலகத்தின் முடிவிலே நடக்கும். மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் [மத். 13:37–43].

### உயர்வுநவிற்சி அணி

உயர்வுநவிற்சி அணி (hyperbole) என்பது வேதாகமத்தில் பொதுவாகக் காணப்படும் சொல்லணிகளில் மற்றொன்றாகும். வலியுறுத்துவதற்காக வேண்டுமென்றே மிகைப்படுத்திக் கூறுவதையே நாம் உயர்வுநவிற்சி அணி என்று குறிப்பிடுகிறோம். ஒரு தாய் தன் பிள்ளையிடம் ‘‘சாப்பிட வா என்று நான் ஆயிரம் முறை உன்னை அழைத்திருக்கிறேன்’’ என்று சொல்லுகிறாள். இது உயர்வு நவிற்சி அணியாகும். நமது வலதுகையை வெட்டிப்போடுவதைக் குறித்து இயேசுவானவர் கூறியது வேதாகமத்தில் உயர்வுநவிற்சி அணிக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்:





> உன் வலதுகை உனக்கு இடறலுண்டாக்கினால், அதைத் தறித்து எறிந்துபோடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும் [மத். 5:30].

ஏதேனும் ஒரு வகையில் வலதுகையைப் பயன்படுத்திப் பாவம் செய்கிறவர்கள் தங்கள் வலதுகரத்தை வெட்டி விட வேண்டும் என்று வார்த்தைக்கு வார்த்தை அர்த்தப்படும்படி இயேசு கூறியிருப்பாரானால், இன்று நாம் எல்லோருமே நமது வலதுகையை இழந்துபோனவர்களாக இருப்போம்! உண்மையில், பாவத்தைக் குறித்த பிரச்சினை நமது கைகளில் இல்லை. பாவமானது நம்மை நரகத்துக்கு அனுப்பக் கூடியதாக இருக்கிறபடியால், சோதனைகளையும் நாம் தடுக்கிவிழக் கூடிய காரியங்களையும் அகற்றுவதே பாவத்தைத் தவிர்ப்பதற்கான வழியாகும் என்பதே இங்கே இயேசுவானவர் கொடுத்துள்ள போதனையாகும்.

### தேவனுக்கு மனிதப்பண்பு அளித்தல்

தேவனுக்கு மனிதப்பண்பு அளித்தல் (anthropomorphism) என்பது வேதாகமத்தில் காணப்படும் மூன்றாவது வகைப்பட்ட சொல்லணியாகும். இது தேவனைப் புரிந்துகொள்ளுவதற்காக, அவருக்கு மானிடப் பண்புகளை ஏற்றிச் சொல்லும் உருவகமான வெளிப்பாடாகும். எடுத்துக்காட்டாக, ஆதியாகமம் 11:5 வசனத்தில் நாம் இப்படி வாசிக்கிறோம்:

> மனுபுத்திரர் கட்டுகிற நகரத்தையும் கோபுரத்தையும் பார்க்கிறதற்குக் கர்த்தர் இறங்கினார் [ஆதி. 11:5].

எல்லாவற்றையும் அறிந்த தேவன் பாபேலில் மக்கள் கட்டுகிற கோபுரத்தைப் பார்க்கிறதற்காக வானத்தைவிட்டு இறங்கினார் என்று சொல்லப்பட்டிருப்பது உண்மையில் மனிதப்பண்பை அவருக்கு ஏற்றிச் சொல்லுவதாகும்.

தேவனுடைய கரங்கள், நாசி, கண்கள், தலைமயிர் என்று தேவனுடைய சரீரத்தின் உறுப்புகளைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ளவை எல்லாமே இந்த வகைப்பட்ட சொல்லணியே என்று பல வேதாகம வல்லுநர்கள் கருதுகிறார்கள். சர்வ வல்ல தேவன் மனிதரைப்போல இந்த அவயவங்களைப் பெற்றிருக்க வேண்டும் என்பது அவசியமில்லை என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

ஆனால் பல காரணங்களுக்காக நான் இதை ஒப்புக்கொள்ள மாட்டேன். முதலாவதாக, நாம் *தேவ சாயலில்* சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம் என்று வேதாகமம் தெளிவாகச் சொல்லுகிறது:

> பின்பு தேவன்: *நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும்* மனுஷனை உண்டாக்குவோமாக … என்றார் [ஆதி. 1:26 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

நாம் சுய உணர்வையும், நன்னெறிப் பிரகாரமான பொறுப்பையும், பகுத்தறியும் திறனையும் கொண்டிருப்பதில் மட்டுமே தேவனுடைய சாயலிலும் ரூபத்தின்படியேயும் இருக்கிறோம் என்று சிலர் வாதிடுகிறார்கள். என்றாலும், சில அதிகாரங்கள் கழித்து ஆதியாகமம் 1:26 வசனத்தைப் போலவே இருக்கும் மற்றொரு வசனத்தை வாசிப் போமாக:

> ஆதாம், நூற்றுமுப்பது வயதானபோது, தன் *சாயலாகத் தன் ரூபத்தின்படியே* ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்குச் சேத் என்று பேரிட்டான் (ஆதி. 5:3 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

சேத் சரீரப்பிரகாரமாகத் தனது தகப்பன் ஆதாமைப் போலிருந்தான் என்றுதானே இந்த வசனம் சொல்லுகிறது? ஆதியாகமம் 5:3 வசனத்தில் இது இந்த அர்த்தத்தைக் கொண்டிருக்குமானால், இதேபோன்று ஆதியாகமம் 1:26 வசனத்தில் கூறப்பட்டிருப்பது அதே அர்த்தத்தைக் கொண்டிருக்கக் கூடாது? பொது அறிவும், சரியாக அர்த்தம் காணுதலும் இதைச் சரி என்றே சொல்லுகின்றன.

மேலும், தேவனைக் கண்ட சில வேதாகம எழுத்தாளர்களின் மூலம் அவரைக்குறித்த விவரிப்பு நமக்குக் கிடைத்துள்ளது. எடுத்துக் காட்டாக, மோசேயும், எழுபத்து மூன்று இஸ்ரவேலரும் தேவனைக் கண்டார்கள்:

> பின்பு மோசேயும் ஆரோனும் நாதாபும் அபியூவும், இஸ்ரவேலருடைய மூப்பரில் எழுபது பேரும் ஏறிப் போய், *இஸ்ரவேலின் தேவனைத் தரிசித்தார்கள்.* அவருடைய *பாதத்தின்*கீழே நீலக் கல்லிழைத்த வேலைக்கு ஒப்பாகவும் தெளிந்த வானத்தின் பிரபைக்கு ஒப்பாகவும் இருந்தது. அவர் இஸ்ரவேல் புத்திரருடைய அதிபதிகள்மேல் தம்முடைய *கையை* நீட்டவில்லை; அவர்கள் தேவனைத் தரிசித்து, பின்பு புசித்துக் குடித்தார்கள் (யாத். 24:9–11 அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது).

தேவனுக்குக் கைகளும் கால்களும் இருந்தனவா என்று நீங்கள் மோசேயிடம் கேட்டிருந்தால் அவர் என்ன சொல்லியிருப்பார்? [30]

[30] ஒரு முறை தேவன் ‘‘கடந்துபோனபோது’’ மோசே அவருடைய பின்பக்கத் தைக் கண்டார். மோசே தனது முகத்தைக் காணாதபடி தேவன் அவருடைய பார்வையைத் தனது கரத்தினால் மறைத்துக்கொண்டார், பார்க்க, யாத். 33:18–23).





தானியேல் தீர்க்கதரிசி பிதாவாகிய தேவன் மற்றும் குமாரனாகிய தேவனின் தரிசனத்தைப் பெற்றார்:

> நான் பார்த்துக்கொண்டிருக்கையில், சிங்காசனங்கள் வைக்கப்பட்டது; நீண்ட ஆயுசுள்ளவர் *வீற்றிருந்தார்;* அவருடைய வஸ்திரம் உறைந்த மழையைப் போலவும், *அவருடைய சிரசின் மயிர்* வெண்மையாகவும் பஞ்சைப்போலத் துப்புரவாகவும் இருந்தது; அவரு டை.ய சிங்காசனம் அக்கினி ஜூவாலையும், அதின் சக்கரங்கள் எரிகிற நெருப்புமாயிருந்தது. அக்கினி நதி அவர் சந்நிதியிலிருந்து புறப்பட்டு ஓடினது; ஆயிர மாயிரம் பேர் அவரைச் சேவித்தார்கள்; கோடாகோடி பேர் அவருக்கு முன்பாக நின்றார்கள்; நியாயசங்கம் உட்கார்ந்தது; புஸ்தகங்கள் திறக்கப்பட்டது... இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக் கொண்டிருக் கையில், இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார். சகல ஜனங்களும் ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரிகமும் கொடுக்கப்பட்டது; அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும், அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும் (தானி. 7:9–10, 13–14 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

நீங்கள் தானியேலிடம் தேவன் வெள்ளை நிறத் தலை மயிரையும், ஒரு சிங்காசனத்தில் வீற்றிருக்கக்கூடிய வடிவத்தையும் பெற்றிருந்தாரா என்று கேட்டால், அவர் என்ன சொல்லியிருப்பார்?

இவை இப்படியிருக்கிறபடியால், பிதாவாகிய தேவன் மாம்சத்தையும் இரத்தத்தையும் பெற்றிராமல் ஆவியாக இருந்தாலும் (பார்க்க, யோவான் 4:24), மனிதருடைய வடிவத்தைப்போல மகிமை யான வடிவத்தைக் கொண்டிருக்கிறார் என்ற நிச்சயத்தைப் பெற்றிருக்கிறேன்.

வேதாகமத்திலுள்ள எந்தப் பகுதிகளுக்கு வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் காண வேண்டும், எந்த வசனங்களைச் சொல்லணியாகவும், அடையாளக் குறியீடாகவும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதைக் கண்டறிவது எப்படி? தர்க்கரீதியாகப் பகுத்தறியக்கூடிய எல்லோருக்கும் இது எளிதாகவே இருக்கும். எழுதப்பட்டிருப்பதைச் சொல்லணியாகவோ அல்லது குறியீடாகவோ எடுத்துக்கொள்ள முடியாவிட்டால், அதற்கு வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம்காணுங்கள். எடுத்துக்காட்டாக, பழைய

ஏற்பாட்டுத் தீர்க்கதரிசன நூல்களிலும், வெளிப்படுத்தல் நூலிலும் அடையாளக்குறியீடுகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இவைகளில் சிலவற்றுக்கு விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. சிலவற்றுக்கு விளக்கம் கொடுக்கப்படவில்லை. இப்படிப்பட்ட அடையாளக் குறியீடுகளைக் கண்டுபிடிப்பது கடினமான காரியமல்ல.

### விதி # 2: பின்னணியோடு சேர்த்து வாசித்தல். ஒவ்வொரு பகுதிக்கும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் மற்றும் முழு வேதாகமத்தின் அடிப்படையில் அர்த்தம்காண வேண்டும். கூடுமான வரையில் வரலாற்று மற்றும் கலாச்சாரப் பின்னிகளையும் கருத்தில் கொள்ள வேண்டும்

ஒரு பகுதியின் உடனடி மற்றும் வேதாகமப் பின்னணியைக் கருத்தில் கொள்ளாமல் வாசிப்பது தவறாக அர்த்தம்காண்பதற்கு அடிப்படைக் காரணங்களில் ஒன்றாக இருக்கிறது.

வசனங்களை அவைகளின் பின்னணியிலிருந்து எடுத்து நீங்கள் விரும்பியதை அது சொல்லும்படி செய்ய முடியும். எடுத்துக்காட்டாக, தேவனே இல்லையென்று வேதாகமம் சொல்லுவதை நீங்கள் அறிவீர்களா? 14ஆம் சங்கீதத்தில் நாம் ‘‘தேவன் இல்லை’’ என்று வாசிக்கிறோம் [சங். 14:1]. இந்த வார்த்தைகளுக்கு நாம் சரியாக அர்த்தம் காண வேண்டுமானால் அதன் பின்னணியோடு சேர்த்து அதை வாசிக்க வேண்டும்: ‘‘தேவன் இல்லை என்று ம*திகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான்*’’ [சங். 14:1 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது]. இப்போது இந்த வசனத்தின் அர்த்தமே முழுவதுமாக மாறிவிடுகிறது!

மற்றொரு எடுத்துக்காட்டு: ஒருமுறை ஒரு பிரசங்கியார் கிறிஸ்தவர்கள் ‘‘அக்கினியினால் ஞானஸ்நானம்’’ எடுக்க வேண்டியதின் முக்கியத்துவத்தைக் குறித்துப் பேசினார். மத்தேயு 3:11 வசனத்தில் யோவான்ஸ்நானனின் வார்த்தைகளை வாசிப்பதின்மூலம் அவர் தனது பிரசங்கத்தைத் துவங்கினார்: ‘‘மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்; எனக்குப் பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்.’’

இந்த ஒரே வசனத்தை அடிப்படையாகக் கொண்டு அவர் தனது பிரசங்கத்தை உருவாக்கியிருந்தார். ‘‘நீங்கள் பரிசுத்த ஆவியானவரினால் ஞானஸ்நானம் பெறுவது போதுமானது அல்ல! யோவான்ஸ்நானன் அறிவித்தபடி இயேசுவானவர் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க விரும்புகிறார்’’ என்று அவர் சொன்னது எனக்கு





நன்றாக நினைவில் இருக்கிறது. நாம் ‘‘அக்கினியினால் ஞானஸ்நானம்’’ பெற்றபிறகு ஆண்டவருக்காக ஊழியம்செய்யும்படி வைராக்கியத்தைப் பெறுவோம் என்று அவர் கூறினார். பிறகு ‘‘அக்கினியினால் ஞானஸ்நானம்’’ பெற விரும்புகிறவர்கள் முன்னால் வரும்படி அவர் அழைப்பு விடுத்தார்!

துரதிருஷ்டவசமாக இவர் வேதவசனத்தை அதன் பின்னணியிலிருந்து எடுத்துப் பயன்படுத்தும் தவறைச் செய்திருந்தார்.

இயேசுவானவர் அக்கினியினால் ஞானஸ்நானம் கொடுப்பார் என்று யோவான்ஸ்நானன் கூறியபோது அவர் கொண்டிருந்த அர்த்தம் என்ன? இதற்குப் பதிலைப் பெறவேண்டுமானால், அந்த வசனத்துக்கு முன்னாலுள்ள இரண்டு வசனங்களையும், பின்னாலுள்ள ஒரு வசனத்தையும் வாசிக்க வேண்டும். நாம் முன்னாலுள்ள இரண்டு வசனங்களை முதலில் பார்ப்போம்:

> ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லிக்கொள்ள நினையாதிருங்கள்; தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைக்கப்பட்டிருக்கிறது; ஆகையால், நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு *அக்கினியிலே போடப்படும்* [மத். 3:9—10 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

அன்று யோவான்ஸ்நானனின் பேச்சைக் கேட்டவர்களில் யூதர்கள் இருந்தார்கள் என்பதையும், அவர்கள் தங்கள் இரட்சிப்புக்காகத் தங்கள் வம்சாவளியை நம்பியிருந்தார்கள் என்றும் முதலில் அறிந்து கொள்ளுகிறோம். எனவே, யோவான்ஸ்நானனின் பிரசங்கம் சுவிசேஷப் பிரசங்கமாக இருந்தது.

இரட்சிக்கப்படாத மக்கள் *அக்கினியிலே போடப்படும்* அபாயத்தில் இருக்கிறார்கள் என்றும் யோவான்ஸ்நானன் எச்சரித்தார் என்பதையும் நாம் அறிகிறோம். பத்தாம் வசனத்தில் அவர் குறிப்பிடும் ‘‘அக்கினியும்’’ பதினொன்றாம் வசனத்தில் குறிப்பிடப்படும் அக்கினியும் ஒன்றே என்ற முடிவுக்கு நம்மால் வர முடியும்.

12ஆம் வசனத்தை வாசிக்கும்போது, இது இன்னும் தெளிவாகிறது:

> தூற்றுக் கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத

> அக்கினியினால் சுட்டெரிப்பார் (மத். 3:12 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

பத்தாம் மற்றும் பன்னிரண்டாம் வசனங்களில் யோவான்ஸ்நானன் குறிப்பிடும் அக்கினி நரக அக்கினியாகும். பதினொன்றாம் வசனத்தில் இயேசுவானவர் மக்களை இரண்டாகப் பிரிப்பார் என்று உருவகரீதியாகச் சொல்லுகிறார். கோதுமையை அவர் ''களஞ்சியத்திலே சேர்ப்பார்.'' ஆனால் பதரையோ ''அவியாத அக்கினியினால்'' சுட்டெரிப்பார்.

சுற்றியுள்ள வசனங்களின் அடிப்படையில் யோவான்ஸ்நானன் பதினொன்றாம் வசனத்தில் கூறியதின் அர்த்தம் இதுவாகவே இருக்க வேண்டும்: இயேசுவானவர் மக்களுக்கு, அவர்கள் விசுவாசிகளானால் பரிசுத்த ஆவியினாலும், அவிசுவாசிகளானால் அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார். இதுவே சரியான அர்த்தம்காணுதலாக இருக்கிறபடியால், எவரும் அக்கினியினாலே ஞானஸ்நானம் பெறுவதைக் குறித்துக் கிறிஸ்தவர்களுக்குப் பிரசங்கிக்கக் கூடாது.

இந்த வசனங்களின் உடனடிப் பின்னணிக்கு அப்பாற்பட்டு புதிய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதிகளையும் பார்க்க வேண்டும். கிறிஸ்தவர்கள் ''அக்கினியினாலே ஞானஸ்நானம்'' பெற்றதற்கு நாம் நடபடிகளின் நூலிலிருந்து ஒரு எடுத்துக்காட்டைக் கொடுக்க முடியுமா? முடியாது. ஓரளவு நெருக்கமான காரியம் லூக்கா பெந்தெகொஸ்தே நாளன்று நடந்ததை விவரிப்பதாகும். சீஷர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ் நானத்தைப் பெற்றபோது, அக்கினிமயமான நாவுகள் சீஷர்கள்மேல் தாற்காலிகமாக அமர்ந்ததாக அவர் சொல்லியிருக்கிறார். ஆனால் இது ''அக்கினியினால் ஞானஸ்நானம்'' என்று லூக்கா சொல்லவில்லை. மேலும் நிருபங்களில் அக்கினியினால் ஞானஸ்நானம் பெறுவதைக் குறித்து ஏதாவது போதனை கொடுக்கப்பட்டிருக்கிறதா? இல்லை. எனவே, எந்தவொரு கிறிஸ்தவரும் அக்கினியினால் ஞானஸ்நானம் பெறுவதை நாடக் கூடாது என்ற முடிவுக்கு வருவது சரியாகும்.

### வேதவசனத்திலிருந்து எடுக்கப்பட்ட பொய்யான சுவிசேஷம்

பல வேளைகளில் பிரசங்கிமார்களும், போதகர்களும் சுவிசேஷத்தையே தவறாகப் போதிக்கிறார்கள். அவர்கள் பின்னணியைக் கருதாமல் வேதவசனத்துக்கு அர்த்தம்காணுவதே இதற்குக் காரணமாகும். இதன் காரணமாகவே தேவனுடைய கிருபையைக் குறித்த கள்ளப்போதகம் அதிகரித்துவருகிறது.

எடுத்துக்காட்டாக, இரட்சிப்பானது கிரியையினால் அல்ல, கிருபையினால் வந்தது என்று பவுல் அப்போஸ்தலன் எபேசியர் 2:8இல் கூறியுள்ள வசனத்தை, அதன் பின்னணியைப் புறக்கணித்துவிட்டு, பொய்யான சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கப் பயன்படுத்துகிறார்கள். பவுல் இப்படி எழுதினார்:





> கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமைபாராட்டாத படிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல (எபே. 2:8–9).

பலர் இரட்சிப்பானது கிருபையினாலே வருவது, ஒரு ஈவு, கிரியைகளின் விளைவு அல்ல என்ற பவுலின் வாசகங்களின்மீது மட்டும் கவனத்தைச் செலுத்துகிறார்கள். இதிலிருந்து, நூற்றுக்கணக்கான வேத வசனங்களுக்கு முரண்பாடாக, இரட்சிப்புக்கும் பரிசுத்தத்துக்கும் இடையே தொடர்பு இல்லை என்ற முடிவுக்கு வருகிறார்கள். சிலர் மேலும் ஒரு படி சென்று, இதனால் இரட்சிப்புக்கு மனந்திரும்புதல் தேவையில்லை என்றுகூடச் சொல்லுகிறார்கள். பின்னணியைப் புறக்கணிப்பதினால் எப்படி வேதவசனத்துக்குத் தவறாக அர்த்தம் காணப்படுகிறது என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறது.

முதலாவதாக, இந்தப் பகுதி *முழுவதுமாக* என்ன சொல்லுகிறது என்பதைப் பார்ப்போம். நாம் *கிருபையினாலே இரட்சிக்கப்பட்டிருக் கிறோம்* என்று மட்டும் பவுல் சொல்லவில்லை. *நாம் கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்* என்று அவர் சொல்லியிருக்கிறார். கிருபையைப் போலவே இரட்சிப்பின் சமன்பாட்டில் விசுவாசமும் இடம் பெற்றிருக்கிறது. கிரியையில்லாத விசுவாசம் பயனற்றது, செத்தது, அதால் இரட்சிக்க முடியாது என்று வேதவசனம் சொல்லுகிறது (பார்க்க, யாக். 2:14–26). இதனால் பரிசுத்தம் என்பது இரட்சிப்புக்குப் பொருத்தமில்லாத ஒன்று என்று பவுல் பிரசங்கிக்கவில்லை. நமது சொந்த முயற்சிகள் நம்மை இரட்சிக்க வில்லை; நமது இரட்சிப்புக்கு அடிப்படை தேவனுடைய கிருபையே என்று அவர் சொல்லுகிறார். தேவனுடைய கிருபை இல்லாமல் நாம் ஒருபோதும் இரட்சிக்கப்பட முடியாது. ஆனால் நாம் தேவனுடைய கிருபைக்கு விசுவாசத்தைக் கொண்டு செவிசாய்த்தால் மட்டுமே இரட்சிப்பு மெய்யாக உண்டாகிறது. இரட்சிப்பின் விளைவு எப்போதுமே கீழ்ப்படிதலாகும், இது மெய்யான விசுவாசத்தின் கனியாக இருக்கிறது. அடுத்த வசனத்தின் பின்னணியை நாம் பார்க்கும்போது இதற்கு ஆதாரம் இருக்கிறது. பவுல் இப்படிச் சொல்லுகிறார்:

> ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார் (எபே. 2:10).

நாம் கீழ்ப்படிதலின் நற்கிரியைகளில் நடக்க வேண்டும் என்பதே நாம் பரிசுத்த ஆவியானவரால் மறுபடியும் பிறக்கும்படி செய்யப்பட்டிருப்பதற்கும், இப்போது கிறிஸ்துவில் புதுச் சிருஷ்டியாக இருப்பதற்கும் முழுக் காரணமாக இருக்கிறது. பவுலின் இரட்சிப்பைக் குறித்த சமன்பாடு இப்படியிருக்கிறது:

**கிருபை + விசுவாசம் = இரட்சிப்பு + கீழ்ப்படிதல்**

அதாவது, கிருபையும் விசுவாசமும் சேரும்போது, அது இரட்சிப்பையும், கீழ்ப்படிதலையும் விளைவிக்கிறது. தேவனுடைய கிருபைக்கு விசுவாசத்தோடு செவிசாய்க்கும்போது, எப்போதும் இரட்சிப்பும் நற்கிரியைகளும் அதன் பின்விளைவுகளாக இருக்கின்றன.

என்றாலும் பவுலின் வார்த்தைகளை அதன் பின்னணியைவிட்டு வெளியே எடுத்திருக்கும் மக்கள் இப்படிப்பட்ட ஒரு சூத்திரத்தைத் தயாரித்திருக்கிறார்கள்:

**கிருபை + விசுவாசம் – கீழ்ப்படிதல் = இரட்சிப்பு**

அதாவது கீழ்ப்படிதல் இல்லாமல் கிருபையும் விசுவாசமும் சேரும்போது அது இரட்சிப்பை விளைவிக்கிறது என்று சொல்லுகிறார்கள். வேதாகமத்தைப் பொருத்தவரையில் இது கள்ளப்போதகமாகும்.

பவுலின் வார்த்தைகளை நாம் தொடர்ந்து வாசிக்கும்போது, எபேசுவிலிருந்த சூழ்நிலை பவுல் பிரசங்கம்செய்த எல்லா இடங்களுக்கும் ஒத்ததாக இருந்ததாகக் கண்டுகொள்ளுகிறோம். அதாவது, பவுலினால் புதிதாக மனமாற்றம் பெற்றவர்களிடம் யூதர்கள் சென்று, அவர்கள் இரட்சிக்கப்பட வேண்டுமானால் விருத்தசேதனம் செய்துகொள்ள வேண்டும், மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டும் என்றெல்லாம் சொல்லிவந்தார்கள். நம்மை இரட்சிக்காத ‘‘கிரியைகளைக்’’ குறித்துப் பவுல் எழுதும்போது அவருடைய கருத்தில் இந்த விருத்தசேதனமும் பிற சடங்காச்சாரங்களும் இருந்தன என்பது தெளிவாகிறது (எபே. 2:11–22).

மேலும் தொடர்ந்து வாசித்து, எபேசியருக்குப் பவுல் எழுதிய முழு நிருபத்தின் பின்னணியில் பார்க்கும்போது, பரிசுத்தமானது இரட்சிப்புக்கு அத்தியாவசியமானது என்று பவுல் விசுவாசித்தார் என்பது தெளிவாகத் தெரிகிறது:

> மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது. அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள்; ஸ்தோத்திரஞ் செய்தலே தகும். *விபசாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாராதனைக்காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரமடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே. இப்படிப்பட்டவைகளினிமித்தமாகக் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வருவதால், ஒருவனும் உங்களை வீண் வார்த்தைகளினாலே மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்* (எபே. 5:3–6 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).





விபச்சாரக்காரனையாவது, அசுத்தனையாவது, பொருளாசைக்காரனையாவது தேவனுடைய கிருபை இறுதியாக இரட்சிக்கும் என்று பவுல் விசுவாசித்திருப்பாரானால் அவர் இந்த வார்த்தைகளை எழுதியிருக்க மாட்டார். எபேசியர் 2:8–9 வசனங்களில் பவுல் எழுதியிருப்பதில் கொண்டிருக்கும் நோக்கத்தை எபேசியருக்கு அவர் எழுதிய முழு நிருபத்தின் பின்னணியில்தான் நாம் சரியாகப் புரிந்துகொள்ள முடியும்.

## கலாத்தியரின் நிலை

பவுல் கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தின் வார்த்தைகளும் அவைகளின் பின்னணியிலிருந்து எடுக்கப்பட்டு தவறான அர்த்தம் கொடுக்கும்படி திரிக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாகச் சுவிசேஷமும் திரிக்கப்பட்டுள்ளது, உண்மையில் கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில் பவுல் இதைச் சரிசெய்யவே முயலுகிறார்.

‘‘நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் அல்ல, விசுவாசத்தினாலேயே இரட்சிப்பு’’ என்பதுதான் கலாத்திய நிருபத்தின் கருப்பொருளாகும். தேவனுடைய ராஜ்யத்துக்குள் நுழைவதற்குப் பரிசுத்தம் தேவையில்லை என்ற முடிவுக்குத் தனது வாசகர்கள் வர வேண்டும் என்பதே பவுலின் நோக்கமாக இருந்ததா? நிச்சயமாக இல்லை.

முதலாவதாக, பவுல் மறுபடியுமாகக் கலாத்தியாவுக்கு வந்து இரட்சிக்கப்பட வேண்டுமானால் விருத்தசேதனம்பண்ண வேண்டும், மோசேயின் நியாயாப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திய யூதர்களுக்கு எதிராகவே இந்த நிருபத்தில் போராடுகிறார். விருத்தசேதனத்தைக் குறித்துப் பவுல் மறுபடியும் மறுபடியுமாகத் தனது நிருபத்தில் குறிப்பிடுகிறார். ஏனென்றால் யூதப் பிரமாணவாதிகள் இதையே அதிகமாக வலியுறுத்தினார்கள் (பார்க்க, கலா. 2:3, 7–9, 12; 5:2–3, 6, 11; 6:12–13, 15). கலாத்தியர்கள் கிறிஸ்துவின் கட்டளைகளுக்கு அதிகமாகக் கீழ்ப்படிகிறார்கள் என்பதைக் குறித்துப் பவுல் கரிசனைகொள்ளவில்லை. அவர்கள் தங்கள் இரட்சிப்புக்காகக் கிறிஸ்துவில் விசுவாசம் வைக்காமல், விருத்தசேதனத்திலும், மோசே

யின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளும் தங்கள் பரிதாபகரமான முயற்சியிலும் நம்பிக்கை வைத்திருக்கிறார்களே என்றுதான் அவர் கவலைப்பட்டார்.

கலாத்தியருக்குப் பவுல் எழுதிய முழு நிருபத்தின் பின்னணியில் பார்க்கும்போது ஐந்தாம் அதிகாரத்தில் நாம் இப்படி வாசிக்கிறோம்:

> ஆவியினால் நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல. மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவை யாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; *இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று* முன்னே நான் சொன்னது போல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன் [கலா. 5:18–21 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

கலாத்தியர்கள் பரிசுத்தமில்லாதவர்களாக இருந்தாலும் அவர்கள் பரலோகத்துக்குச் செல்ல முடியும் என்ற செய்தியைப் பவுல் சொல்ல விரும்பியிருந்தால் அவர் இந்த வார்த்தைகளை ஒருபோதும் எழுதியிருக்க மாட்டார். பரிசுத்தமில்லாத மக்கள் பரலோகத்துக்குச் செல்ல முடியும் என்பது அவருடைய செய்தி அல்ல; தேவனுடைய கிருபையையும், கிறிஸ்துவின் பலியையும் ஒன்றுமில்லாததாக ஆக்கிவிட்டு, விருத்தசேதனத்தின் மூலமாகவும், மோசேயின் நியாயப்பிரமாணத்தின் மூலமாகவும் இரட்சிப்பைச் சம்பாதித்துக்கொள்ள முயலுபவர்கள் இரட்சிக்கப்பட மாட்டார்கள் என்பதே அவருடைய செய்தியாகும். விருத்தசேதனம் இரட்சிப்பைக் கொண்டுவருவதில்லை. இயேசுவில் விசுவாசம் வைப்பதே இரட்சிப்பைக் கொடுத்து, விசுவாசிகளைப் புதிய பரிசுத்தமான சிருஷ்டிகளாக மாற்றுகிறது:

> கிறிஸ்து இயேசுவுக்குள் விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை; புது சிருஷ்டியே காரியம் [கலா. 6:15].

வேதாகமத்துக்கு அர்த்தம்காணும்போது பின்னணியைக் கருத்தில் கொள்ளுவது எவ்வளவு முக்கியம் என்பதை இவையெல்லாம் வலியுறுத்துகின்றன. பின்னணியைப் புறக்கணிப்பதின் மூலமாகவே தேவனுடைய வார்த்தையின் அர்த்தத்தை மாற்றி, சுவிசேஷத்தைத் திரித்துக் கூற முடியும். வேண்டுமென்றே இப்படிச் செய்யும் ‘‘ஊழியர்





களின்’’ இருதயம் எப்படிப்பட்டதாக இருக்கிறது என்று நாம் வியப்படைகிறோம்.

எடுத்துக்காட்டாக, ஒருமுறை ஒரு பிரசங்கியார் நாம் சுவிசேஷத்தைப் போதிக்கும்போது, தேவனுடைய கோபாக்கினையைக் குறித்துக் குறிப்பிடக் கூடாது என்று சொல்லியதை நான் கேட்டிருக்கிறேன். ஏனென்றால் தேவதயவே நாம் குணப்படும்படி நம்மை ஏவுகிறது [ரோமர் 2:4] என்று சொல்லப்பட்டிருக்கிறது என்று அவர் வாதிட்டார். அவரைப் பொருத்தவரையில் தேவன் நல்லவர் என்பதையும், அவருடைய அன்பையும் பற்றியும் மட்டுமே பேசுவதுதான் சுவிசேஷத்தை அறிவிப்பதில் சரியான வழியாகும். இதுவே மக்களை மனந்திரும்பும்படி வழிநடத்தும் என்று அவர் சொன்னார்.

ஆனால் இந்தத் தனிப்பட்ட வசனத்தின் பின்னணியை நாம் வாசிக்கும்போது, மற்ற வசனங்களில் தேவனுடைய கோபாக்கினையையும், நியாயத்தீர்ப்பையும் பற்றிச் சொல்லப்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம். உடனடிப் பின்னணியைப் பார்க்கும்போது, அந்தப் பிரசங்கியார் சொன்னதுபோன்ற நோக்கத்தைப் பவுல் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது:

> இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்களுக்குத் *தேவனுடைய நியாயத்தீர்ப்பு* சத்தியத்தின்படியே இருக்கிறதென்று அறிந்திருக்கிறோம். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்களைக் குற்றவாளிகளென்று தீர்த்தும், அவைகளையே செய்கிறவனே, நீ *தேவனுடைய நியாயத்தீர்ப்புக்குத்* தப்பிக்கொள்ளலாமென்று நினைக்கிறாயோ? அல்லது *தேவதயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று அறியாமல்,* அவருடைய தயவு பொறுமை நீடியசாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டைபண்ணுகிறாயோ? உன் மனக்கடினத்திற்கும் குணப்படாத இருதயத்திற்கும் ஏற்றபடி, தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினை நாளிலே உனக்காகக் கோபாக்கினையைக் குவித்துக்கொள்ளுகிறாயே. தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார். சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார். சண்டைக்காரராயிருந்து, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல், அநியாயத்திற்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கோ *உக்கிரகோபாக்கினை வரும்.* முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் *பொல்லாங்கு*

*செய்கிற எந்த மனுஷ ஆத்துமாவுக்கும் உபத்திரவமும் வியாகுலமும் உண்டாகும்* [ரோமர் 2:2–9 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

தேவனுடைய தயவைக் குறித்துப் பவுல் குறிப்பிட்டிருப்பது தேவன் தமது கோபாக்கினையைச் செயல்படுத்துவதில் தாமதிப்பதின் மூலம் தயவு காட்டுகிறார் என்று சுட்டிக்காட்டுவதற்காகத்தான். வேதாகமம் முழுவதிலும் பிரசங்கம் செய்தவர்கள் பாவிகள் மனந்திரும்ப வேண்டும் என்று வெளியரங்கமாக எச்சரித்திருக்கும் வேளையில், எந்தப் பின்னணியையும் கருத்தில் கொள்ளாமல் அந்த ஊழியரால் எப்படி இவ்வளவு அபத்தமாகப் பேச முடிந்திருக்கிறது என்பது வியப்பாகவே இருக்கிறது.

## வேதவசனங்களின் முரண்படாத தன்மை

வேதாகமமானது ஒரே நபரினால் தூண்டப்பட்டிருக்கிறபடியால், வேதாகமம் முழுவதிலும் அதனுடைய செய்தி முரண்படாதிருக்கிறது. எனவேதான் எந்தவொரு குறிப்பிட்ட பகுதிக்கும் தேவன் நோக்கம் கொண்டிருக்கும் அர்த்தத்தை அறிய பின்னணியை நம்மால் நம்ப முடிகிறது. தேவன் ஒரு வசனத்தில் மற்றொரு வசனத்துக்கு முரண்பாடான எதையும் சொல்ல மாட்டார். அப்படி முரண்பாடாகத் தோன்றுமானால் இரண்டு வசனத்துக்கான அர்த்தங்களும் ஒத்துப் போகும் வரையில் நாம் அதை ஆய்வுசெய்ய வேண்டும். எடுத்துக் காட்டாக, இயேசுவானவரின் மலைப்பிரசங்கத்தில் பல இடங்களில் அவர் பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்துக்கு முரண்பாடகப் போதிப்பது போல முதலில் தோன்றலாம். எடுத்துக்காட்டாக:

> கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று, உரைக்கப் பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக் குச் சொல்லுகிறேன்; தீமையோடு எதிர்த்துநிற்க வேண்டாம்; ஒருவன் உன்னை வலதுகன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு [மத். 5:38–39].

இயேசுவானவர் மோசேயின் நியாயப்பிரமாணத்திலிருந்து நேரடியாக மேற்கோளை எடுத்துக் கொடுத்திருக்கிறார். பிறகு அவர் மேற்கோளாகக் கொடுத்திருக்கும் வாக்கியத்துக்கு முரண்பாடாக இருப்பதுபோலத் தோன்றும் ஒரு வாக்கியத்தையும் சொல்லியிருக்கிறார். அவர் கூறியிருப்பதற்கு நாம் எப்படி அர்த்தம்காண வேண்டும்? அடிப்படை நன்னெறியைக் குறித்த காரியத்தில் தேவன் தமது கருத்தை மாற்றிக்கொண்டிருக்கிறாரா? பழைய உடன்படிக்கையின் கீழ் பழிவாங்கலாம் என்றும் புதிய உடன்படிக்கையின் கீழ் பழிவாங்கக்





கூடாது என்றும் அர்த்தமாகுமா? பின்னணியே இந்தக் கேள்விக்குப் பதிலளிப்பதில் நமக்கு உதவியாக இருக்கிறது.

இயேசுவானவர் முக்கியமாகத் தமது சீஷர்களோடு பேசிக் கொண்டிருந்தார் [பார்க்க, மத். 5:1–2]. இவர்கள் இதற்கு முன்பாக ஜெப ஆலயங்களில் வேதபாரகர் மற்றும் பரிசேயரின் மூலமாகவே தேவனுடைய வார்த்தையைக் கேள்விப்பட்டிருந்தார்கள். அங்கே ‘‘கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்’’ என்ற தேவனுடைய நியாயப் பிரமாணத்தை அவர்கள் கேள்விப்பட்டிருப்பார்கள். ஆனால் வேதபார கரும், பரிசேயரும் இந்த வாக்கியத்தை அதன் பின்னணியைவிட்டு வெளியே எடுத்து அதன் அர்த்தத்தைத் திரித்துக் கூறியிருக்கிறார்கள். சிறிய தவறுகளுக்கும்கூட மக்கள் தாங்களாகவே பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தேவன் அந்தப் பிரமாணத்தைக் கொடுக்க வில்லை. உண்மையில் அவர் மோசேயின் நியாயப்பிரமாணத்தில் பழிவாங்குதல் தமக்குரியதாகச் சொல்லியிருக்கிறார் [பார்க்க, உபா. 32:35]. மக்கள் தங்கள் எதிரிகளுக்கு நன்மை செய்ய வேண்டும் என்றும் அவர் சொல்லியிருக்கிறார் [பார்க்க, யாத். 23:4–5]. ஆனால் வேதபாரகரும் பரிசேயரும் இந்தக் கட்டளைகளைப் புறக்கணித்துவிட்டு, ‘‘கண்ணுக்குக் கண்’’ என்ற தேவனுடைய பிரமாணத்துக்குத் தங்களுடைய சொந்த அர்த்தத்தைக் கொடுத்திருந்தார்கள். இது அவர்களுக்குத் தனிப்பட்ட பழிவாங்குதலுக்கான வசதியான உரிமையைக் கொடுத்தது.[31] அவர்கள் பின்னணியைப் புறக்கணித் திருக்கிறார்கள்.

‘‘கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்’’ என்ற தேவனுடைய கட்டளை, இஸ்ரவேலின் நீதிமன்றங்களில் நீதி வழங்குவது குறித்த அவருடைய கட்டளைகளின் நடுவே கொடுக்கப்பட்டுள்ளது [பார்க்க, யாத். 21:22–24; உபா. 19:15–21]. ஒரு நீதிமன்ற ஒழுங்கைத் தேவன் கொண்டுவந்ததிலிருந்தே அவர் தனிப்பட்ட பழிவாங்குதலுக்கு இடம் கொடுக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. தீங்கிழைக்கப்பட்ட பாரபட்சம் கொண்ட தனிப்பட்டவர்களைவிட, பாரபட்சம் இல்லாத நியாயாதிபதியால் நிரூபணங்களை ஆய்வுசெய்து சரியான நீதியை வழங்க முடியும். நீதிமன்றங்களும் நியாயாதிபதிகளும் குற்றத்துக்கு ஏற்ற தண்டனையைப் பாரபட்சமில்லாமல் வழங்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். இதுவே ‘‘கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்’’ என்பதாகும்.

[31] இயேசுவானவர் ஏற்கெனவே தமது பிரசங்கத்தில், தமது பேச்சைக் கேட்பவர் களின் நீதி வேதபாரகர், பரிசேயரின் நீதிக்கு அதிகமாக இராவிட்டால், அவர்கள் பரலோகத்தில் பிரவேசிக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார் [பாக்க, மத். 5:20]. பிறகு எந்தெந்த வழிகளில் வேதபாரகரும், பரிசேயரும் குறைவுபடு கிறார்கள் என்பதை எடுத்துச் சொன்னார்.

முதலில் முரண்பாடாகத் தோன்றிய ஒன்றை இப்போது நம்மால் இசைவானதாகக் காண முடிகிறது. தங்கள் வாழ்நாள் முழுவதும் பொய்யான உபதேசங்களைக் கேட்டுவந்த மக்களுக்கு இயேசுவானவர் தனிப்பட்ட பழிவாங்குதல் குறித்த தேவனுடைய மெய்யான சித்தம் என்ன என்பதைப் புரிந்துகொள்ளுவதில் உதவிசெய்திருக்கிறார். இது ஏற்கெனவே மோசேயின் நியாயப்பிரமாணத்தில் வெளிப்படுத்தப்பட்டி ருந்தாலும், பரிசேயர்கள் அதைத் திரித்துக் கூறியிருந்தார்கள். இயேசு தாம் மோசேக்குக் கொடுத்த நியாயப்பிரமாணத்துக்கு முரண்படவில்லை. அது முதலில் என்ன நோக்கம் கொண்டிருந்ததோ அந்த மெய்யான அர்த்தத்தையே அவர் வெளிப்படுத்தினார்.

நீதிமன்றத்துக்கு நம்மை இழுத்துச் செல்லக் கூடிய பெரிய வழக்குகளைக் குறித்து நாம் என்ன செய்ய வேண்டும் என்று இயேசுவானவர் எதிர்பார்க்கிறார் என்பதைச் சரியாகப் புரிந்துகொள்ளவும் இது நமக்கு உதவுகிறது. சக இஸ்ரவேலரால் செய்யப்பட்ட எல்லாத் தீங்கையும் இஸ்ரவேலர் காணாமல் விட வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கவில்லை. இல்லாவிட்டால் அவர் நீதிமன்ற ஒழுங்கை ஏற்படுத்தியிருக்க மாட்டார். இதைப்போலவே, சக விசுவாசிகளின் மூலமாக (அல்லது அவிசுவாசிகளின் மூலமாக) தாங்கள் அனுபவிக்கும் ஒவ்வொரு தீங்கையும் கிறிஸ்தவர்கள் காணாமல் விட வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கவில்லை. ஒப்புரவாகாத கிறிஸ்தவர்கள் சக விசுவாசி களின் உதவியை நாட வேண்டும் என்று புதிய ஏற்பாட்டில் சொல்லப் பட்டுள்ளது (பார்க்க, 1 கொரி. 6:1–6). பெரிய குற்றங்களுக்காக ஒரு கிறிஸ்தவர் அவிசுவாசிகளைப் பொதுவான நீதிமன்றத்துக்கு இழுத்துச் செல்லுவதில் எந்தத் தவறும் இல்லை. உங்கள் கண்ணோ அல்லது பல்லோ பறிக்கப்படுவதுதான் பெரிய குற்றமாகும்! சிறிய குற்றங்கள் என்பவை இயேசுவானவர் குறிப்பிட்டதுபோல, கன்னத்தில் அறைதல், (உங்கள் சட்டைபோன்ற) சிறிய காரியங்களுக்காக வழக்குப் போடுதல், ஒரு மைல் தூரம் நடக்கும்படி பலவந்தம்பண்ணப்படுவது போன்ற வையாகும். தேவன் தமது மக்களும் தம்மைப் பின்பற்றி, சிந்திக்காமல் பாவம் செய்துவிட்டவர்களிடமும், தீயவர்களிடமும் அசாதாரணமான கிருபையைக் காட்ட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.

சில நல்லெண்ணம் கொண்ட கிறிஸ்தவர்கள் தாங்கள் இயேசுவுக்குக் கீழ்ப்படிவதாக நினைத்துக்கொண்டு, தங்களிடமிருந்து திருடிப் பிடிபட்டவர்களுக்கு விரோதமாக வழக்குப் பதிவுசெய்ய மறுக்கிறார்கள். தாங்கள் ''மறுகன்னத்தைக் காட்டுவதாக'' அவர்கள் நினைத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் திருடு பவனிடம் அவனுடைய திருட்டுக்காக அவன் தண்டனை அனுபவிக்க வேண்டியதில்லை என்று சொல்லி அவன் மறுபடியுமாகத் திருடு வதற்கே இடம் கொடுக்கிறார்கள். இப்படிப்பட்ட கிறிஸ்தவர்கள்





இனிமேல் அந்தத் திருடனிடம் பறிகொடுக்கப்போகிறவர்களிடம் அன்புகொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா? திருடர்கள் நீதியைச் சந்தித்து, மனந்திரும்ப வேண்டும் என்றே தேவன் விரும்புகிறார். ஆனால் எவராவது உங்கள் கன்னத்தில் அறைவது போன்ற சிறிய குற்றத்தைச் செய்வார்களானால், அவரை நீதிமன்றத்துக்கு இழுத்துச் செல்லாதீர்கள், அவருடைய கன்னத்தில் திருப்பி அறையாதீர்கள். அவரிடம் இரக்கத்தையும், அன்பையும் காட்டுங்கள்.

## புதிய ஏற்பாட்டின் அடிப்படையில் பழைய ஏற்பாட்டுக்கு அர்த்தம் காணுதல்

நாம் புதிய ஏற்பாட்டு வசனங்களுக்குப் பழைய ஏற்பாட்டின் வெளிச்சத்தில் அர்த்தம் காண வேண்டும் என்பது மட்டுமின்றி, எப்போதுமே புதிய ஏற்பாட்டின் அடிப்படையில் பழைய ஏற்பாட்டு வசனங்களுக்கு அர்த்தம் காணவும் வேண்டும். எடுத்துக்காட்டாக, சில உண்மையுள்ள விசுவாசிகள் பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தில் உணவுப்பழக்கம் குறித்த விதிகளை இப்போது கிறிஸ்தவர்களும் பின்பற்ற வேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டிருக்கிறார்கள். ஆனல் அவர்கள் புதிய ஏற்பாட்டிலுள்ள இரண்டு வேதாகமப் பகுதிகளை வாசிப்பார்களானால் பழைய ஏற்பாட்டு உணவு சம்பந்தப்பட்டவிதிகள் புதிய உடன்படிக்கையின் கீழாக இருப்பவர்களுக்குப் பொருத்த மானவை அல்ல என்பதைப் புரிந்துகொள்ளுவார்கள்:

> அதற்கு அவர்: நீங்களும் இவ்வளவு உணர்வில்லாத வர்களா? புறம்பேயிருந்து மனுஷனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்தமாட்டா தென்று நீங்கள் அறிந்துகொள்ளவில்லையா? அது அவன் இருதயத்தில் போகாமல் வயிற்றிலே போகிறது; அதிலிருந்து எல்லாப் போஜனங்களின் அசுத்தங்களை யும் கழிக்கிற ஆசனவழியாய் நீங்கிப் போகும் (மாற்கு 7:18–19).

> ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங் களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள். விவாகம்பண்ணாதிருக்கவும், விசுவாசிகளும் சத்தியத்தை அறிந்தவர்களும் ஸ்தோத்திரத்தோடே அநுபவிக்கும்படி தேவன் படைத்த போஜன பதார்த்தங்களை விலக்கவும் வேண்டுமென்று

> அந்தப் பொய்யர் கட்டளையிடுவார்கள். தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத் தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப் படத்தக்கதல்ல. அது தேவ வசனத்தினாலும் ஜெபத் தினாலும் பரிசுத்தமாக்கப்படும் [1 தீமோ. 4:1–5].

புதிய உடன்படிக்கையின் கீழாக இருக்கும் நாம் மோசேயின் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படிருக்கவில்லை [பார்க்க, 1 கொரி. 9:20–21]. இயேசுவானவர் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் நன்னெறி அம்சங்களை ஏற்றுச் சொன்னாலும் [இப்படியாக அவர் அவைகளைக் கிறிஸ்துவின் பிரமாணத்தில் சேர்த்துக்கொண்டார்] அவரோ அல்லது அப்போஸ்தலர்களோ கிறிஸ்தவர்கள் மோசேயின் உணவுகுறித்த விதிகளைப் பின்பற்ற வேண்டும் என்று சொல்லவில்லை.

என்றாலும் துவக்ககாலக் கிறிஸ்தவர்களில் எல்லோருமே மனமாற்றம் பெற்ற யூதர்களாக இருந்தபடியால், அவர்கள் தங்கள் கலாச்சார உறுதிப்பாடுகளின் காரணமாகப் பழைய உடன்படிக்கையின் உணவு சம்பந்தமான விதிகளைத் தொடர்ந்து பின்பற்றிவந்தார்கள் [பார்க்க, அப். 10:9–14]. புறஜாதியார் கிறிஸ்துவை விசுவாசிக்கத் துவங்கியபோது, யூதக் கிறிஸ்தவர்கள் மோசேயின் உணவு சம்பந்தமான விதிகளைப் பின்பற்றும்படி கேட்டுக்கொண்டார்கள். சுற்றிலுமுள்ள யூதர்கள் தாங்கள் அவமதிக்கப்பட்டதாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்பதற்காகத்தான் இப்படிச் சொன்னார்கள் [பார்க்க, அப். 15:1–21]. எனவே, கிறிஸ்தவர்கள் மோசேயின் உணவுகுறித்த விதிகளைப் பின்பற்றுவதில் தவறு எதுவும் கிடையாது, ஆனால் அதுவே தங்களை இரட்சிக்கிறது என்று அவர்கள் நினைத்துக்கொள்ளக் கூடாது.

துவக்ககாலக் கிறிஸ்தவர்களிடம் விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்ட உணவைச் சாப்பிடக் கூடாது என்றும் சொல்லப்பட்டது. ஆனால் அப்படி நினைக்காத தன்னைப்போன்ற விசுவாசிகளிடம் பவுல் ''விசுவாசத்தில் பலவீனமுள்ளவனைச்'' சேர்த்துக்கொண்டு, அவர்கள் தங்கள் மனச்சாட்சியை மீறும்படி எதையும் செய்யக் கூடாது என்று கேட்டுக்கொண்டிருக்கிறார் [பார்க்க, ரோமர் 14:1]. தேவனுக்கு முன்பாக உறுதிப்பாட்டின் காரணமாக ஒருவன் சில உணவு வகைகளை விலக்கிவைத்தால் [இந்த உறுதிப்பாடுகளுக்கு ஆதாரம் இல்லாவிட் டாலும்], அவன் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறான் என்று அவனைக் குற்றம் சாட்டாமல் அவனுடைய பயபக்திக்காக அவனைப் பாராட்ட வேண்டும். இதைப்போலவே, தனிப்பட்ட உறுதிப்பாட்டின் காரணமாகச் சில உணவு வகைகளை விலக்கிவைப்பவர்கள் அப்படிச் செய்யாத மற்றவர்களைக் குற்றம் சாட்டக் கூடாது. இருசாராரும் ஒருவர் மீது ஒருவர் அன்போடு நடந்துகொள்ள வேண்டும்,





ஏனென்றால் தேவன் இதைத்தான் கட்டளையிட்டிருக்கிறார் [பார்க்க, ரோமர் 14:1–23].

எப்படியிருப்பினும், வேதாகமம் படிப்படியாக வெளிப்படுத்தப்பட்ட ஒன்றாக இருக்கிறபடியால், நாம் எப்போதுமே புதிய வெளிப்பாட்டின் [புதிய ஏற்பாடு] அடிப்படையில் பழைய வெளிப்பாட்டுக்கு [பழைய ஏற்பாடு] அர்த்தம்காண வேண்டும். தேவன் கொடுக்கும் வெளிப்பாடு ஒருபோதும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்காது. அது ஒன்றுக் கொன்று ஆதரவளிப்பதாகவே எப்போதும் இருக்கும்.

## கலாச்சார மற்றும் வரலாற்றுப் பின்னணி

கூடுமான வரையில் நாம் ஆய்வுசெய்யும் வேதாகமப் பகுதியின் கலாச்சார மற்றும் வரலாற்றுப் பின்னணியையும் கருத்தில் கொள்ள வேண்டும். ஒரு வேதாகமப் பின்னணியின் தனிச்சிறப்பான கலாச்சாரம், புவியியல் மற்றும் வரலாற்றை அறிவது அந்தப் பகுதியைக் குறித்த புதிய உள்ளறிவைப் பெறுவதற்கு உதவியாக இருக்கும். இதற்கு வேதாகமத்தைத் தவிர பிற நூல்களின் உதவியும் தேவைப்படுகிறது. ஒரு நல்ல ஆய்வு வேதாகமம் இந்தக் காரியத்தில் உதவிசெய்யும்.

வேதாகமத்தை வாசிக்கும்போது, எப்படி வரலாற்று அல்லது கலாச்சாரச் செய்திகள் நம்மைக் குழப்பமடையாமல் காக்கின்றன என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன:

1] மக்கள் வீட்டுக் கூரைக்கு ஏறுவதைக் குறித்தோ [பார்க்க, அப். 10:9] அல்லது வீட்டுக் கூரையைப் பிரிப்பது குறித்தோ [பார்க்க, மாற்கு 2:4] நாம் அடிக்கடி வாசிக்கிறோம். வேதாகம நாட்களில் வீட்டுக் கூரைகள் சமதளமானவையாக இருந்தன. வீட்டுக்கு வெளியே கூரைக்குச் செல்லுவதற்கான படிக்கட்டுகள் காணப்படும். இதை நாம் அறியாவிட்டால், எவராவது வீட்டுக் கூரையில் சறுக்கிவிழாமல் புகைக்கூண்டைப் பிடித்துக்கொண்டிருப்பதாக நாம் நினைத்துக் கொள்வோம்.

2] மாற்கு 11:12–14 வசனத்தில் இயேசுவானவர் அத்திப் பழம் காணப்படாத ஒரு அத்திமரத்தைச் சபித்ததாக நாம் வாசிக்கிறோம். ஆனால் அது அத்திப்பழக் காலமாக இருக்கவில்லை. ஆனால் அத்திப் பழத்துக்கான காலம் கடந்தபின்னரும் மரங்களில் ஒருசில பழங்கள் காணப்படும். எனவே இயேசுவானவர் அந்த மரத்தில் பழங்களை எதிர்பார்த்ததில் தவறேதுமில்லை.

3] லூக்கா 7:37–48 வசனங்களில் இயேசு ஒரு பரிசேயனின் வீட்டில் உணவருந்திக்கொண்டிருந்தபோது, ஒரு பெண் உள்ளே நுழைந்ததாக வாசிக்கிறோம். அவள் இயேசுவுக்குப் பின்னால் நின்று அழுது, தன் கண்ணீரினால் அவருடைய பாதங்களை நனைத்து, தன்

தலைமயிரினால் அவைகளைத் துடைத்து, முத்தமிட்டு, பரிமள தைலத்தினால் அபிஷேகம் செய்தாள் என்று நாம் பார்க்கிறோம். இயேசுவானவர் ஒரு மேசையில் அமர்ந்து சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போது அவள் எப்படி இதைச் செய்திருக்க முடியும் என்ற கேள்வி எழுகிறது அல்லவா? அவள் மேசைக்கு அடியில் சென்றா இவ்வளவு காரியங்களையும் செய்தாள்? அவளால் எப்படி மற்றவர்களின் கால்களைக் கடந்து செல்ல முடிந்தது?

''பந்தியிருந்தபோது'' என்று லூக்கா குறிப்பிடுகிறார் (லூக்கா 7:37). அந்தக் காலத்தில் ஒரு உயரம் குறைவான மேசையைச் சுற்றிலும் ஒருபக்கமாகச் சாய்ந்து படுத்தபடியே உணவருந்தினார்கள். ஒரு கையை அவர்கள் ஆதாரமாகப் பயன்படுத்தினார்கள். மற்றக் கையின்மூலம் உணவை எடுத்துச் சாப்பிட்டார்கள். இதனால் இயேசுவின் பாதங்களை அபிஷேகம் செய்வது அந்தப் பெண்ணுக்கு எளிதாக இருந்தது.

கடைசி இராப்போஜனத்தின்போது எப்படி யோவானால் இயேசுவின் மார்பில் சாய்ந்து அவரிடம் கேள்விகேட்க முடிகிறது என்பதையும் இப்போது நாம் அறிந்துகொள்ளுகிறோம். இயேசுவுக்கு முதுகைக் காட்டயபடியே யோவான் சாய்ந்து படுத்திருந்தான். கேள்விகேட்கும் போது அவன் பின்னால் சாய்ந்து அவருடைய மார்பில் சாய்ந்து கொண்டான் (பார்க்க, யோவான் 13:23–25). ஆனால் கடைசி இராப்போஜனம் ஓவியத்தை வரைந்த டாவின்சி இந்த வரலாற்றுப் பின்னணியை அறியாதவராக, இயேசுவுக்கு இரண்டு பக்கமும ஆறு ஆறு பேராகச் சீஷர்கள் அமர்ந்திருப்பதுபோலப் படத்தை வரைந்திருக் கிறார்.

## ஆடைகளைக் குறித்த ஒரு பொதுவான கேள்வி

''பெண்கள் ஆண்களின் உடைகளை அணியக் கூடாது என்று வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடியால், பெண்கள் கால் சட்டைகளை அணியலாமா?'' என்ற கேள்வியை உலகெங்கிலுமுள்ள பல போதகர்கள் என்னிடம் கேட்டிருக்கிறார்கள்.

இது ஒரு நல்ல கேள்வியாகும். அர்த்தம் காணுதல் குறித்த விதிகளைப் பயன்படுத்தி, கலாச்சாரப் பின்னணியையும் கருத்தில் கொண்டு நாம் இந்தக் கேள்விக்குப் பதிலைக் காண்போம்.

முதலாவதாக, ஆண்களின் ஆடைகளைப் பெண்கள் அணியக் கூடாது என்று கூறப்பட்டிருக்கும் வசனத்தைப் பார்ப்போம்:

> புருஷரின் உடைகளை ஸ்திரீகள் தரிக்கலாகாது;
> ஸ்திரீகளின் உடைகளைப் புருஷர் தரிக்கலாகாது;
> அப்படிச் செய்கிறவர்கள் எல்லாரும் உன் தேவனாகிய
> கர்த்தருக்கு அருவருப்பானவர்கள் (உபா. 22:5).





''இந்தக் கட்டளையைக் கொடுப்பதில் தேவனுடைய நோக்கம் என்ன?'' என்ற கேள்வியை முதலில் கேட்டுப்பார்க்க வேண்டும். பெண்கள் கால்சட்டை அணியக் கூடாது என்பதுதான் அவருடைய நோக்கமா?

இல்லை, அது அவருடைய நோக்கமாக இருக்க முடியாது. ஏனென்றால் அந்த நாட்களில் இஸ்ரவேலில் எவருமே கால்சட்டை அணிந்தது கிடையாது. கால்சட்டைகள் ஆண்களுடைய வஸ்திரங்கள் என்று கருதப்படவில்லை, உண்மையில் அது யாருடைய வஸ்திரமாக வும் இருக்கவில்லை. உண்மையில், வேதாகம நாட்களில் ஆண்கள் தரித்த ஆடைகள் இன்று பெண்கள் அணியும் ஆடைகளைப் போலவே தான் இருக்கின்றன. இந்த வரலாற்று மற்றும் கலாச்சாரச் செய்தி தேவன் கூற முயலுவதைச் சரியாகப் புரிந்துகொள்ள நமக்கு உதவுகிறது.

அப்படியானால் தேவனுடைய நோக்கம் என்ன?

எதிர்பாலாரின் வஸ்திரங்களைத் தரிப்பவர்கள் தேவனுக்கு *அருவருப்பானவர்கள்* என்றே சொல்லப்பட்டிருக்கிறது. இது தீவிரமான காரியமாகும். ஒரு ஆண் ஒரு பெண்ணின் கழுத்துக்குட்டையை எடுத்து மூன்று விநாடி நேரம் தனது கழுத்தில் சுற்றிக்கொண்டால் அது அவனைத் தேவனுக்கு அருவருப்பானவனாக ஆக்குமா? இது சந்தேகமாகவே தோன்றுகிறது.

எதிர்பாலாரைப்போலத் தோன்றும்படியாக வேண்டுமென்றே அவர்களுடைய ஆடைகளை அணிந்துகொள்ளுபவர்களையே தேவன் குறிப்பிட்டிருக்க வேண்டும். ஏன் ஒருவர் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்ய வேண்டும்? அவனோ அல்லது அவளோ தன்னுடைய சொந்தப் பாலைச் சேர்ந்த ஒருவரைக் கவர்ந்திழுக்கவே இப்படிச் செய்ய வேண்டியிருக்கும். இந்தத் தவறான பாலுறவையே நாம் உடை மாறியணிதல் (transvestism) என்று குறிப்பிடுகிறோம். இது எப்படி தேவனுக்கு அருவருப்பாக இருக்கிறது என்பதை இப்போது நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

எனவே உபாகமம் 22:5 வசனத்தின் அடிப்படையில் பெண்கள் கால்சட்டை அணிவது தவறு என்ற முடிவுக்கு வர முடியாது. ஆனால் அவள் பெண்களைக் கவருவதற்காக இப்படிச் செய்தால் அது தவறாகும். அவள் கால்சட்டை அணிந்தாலும் பெண்ணைப்போலவே தோற்றமளித்தால் அவள் பாவம் செய்யவில்லை.

பெண்கள் கண்ணியமாக ஆடையணிய வேண்டும் என்று வேத வசனம் சொல்லுகிறது (பார்க்க, 1 தீமோ. 2:10). எனவே இறுக்க மானதும் சரீரத்தைக் காட்டுகிறதுமான கால்சட்டைகளை (இப்படிப்பட்ட வேறு ஆடைகளையும் கூட) அணியக் கூடாது. ஏனென்றால் இது

ஆண்களின் இச்சையைத் தூண்டலாம். மேற்கத்திய நாடுகளிப் பெண்கள் பெரும்பாலும வெளியிடங்களில் அணியும் ஆடைகள் பொருத்தமில்லா தவையாகவே இருக்கின்றன. இப்படிப்பட்ட ஆடைகளை வளரும் நாடுகளில் விபசாரிகள் மட்டுமே அணிகிறார்கள். ''கவர்ச்சியாகத்'' தோற்றமளிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு எந்தப் பெண்ணும் வெளியிடங்களில் ஆடையணியக் கூடாது.

## மேலும் சில சிந்தனைகள்

சீனாவிலுள்ள போதகர்கள் ஒருபோதும் பெண்கள் கால்சட்டை களை அணிவதைக் குறித்து என்னிடம் கேட்டதில்லை என்பது சுவாரசியமான காரியமாகும். ஏனென்றால் பெரும்பாலான பெண்கள் நீண்டகாலமாகக் கால்சட்டைகளை அணிந்துவருகிறார்கள். பெரும்பாலான பெண்கள் கால்சட்டை அணியாத நாடுகளின் போதகர் களே இந்தக் கேள்வியைக் கேட்கிறார்கள். இது அவர்களுடைய தனிப்பட்ட கலாச்சாரப் பாரபட்சத்தைக் காட்டுகிறது.

மியன்மாரிலுள்ள பெண் ஊழியர்களும் இப்படிப்பட்ட கேள்வியை என்னிடம் கேட்டதில்லை. அங்கே ஆண்கள் பாரம்பரியமாக நாம் பாவாடை என்று அழைக்கும் ஆடையை அணிகிறார்கள்; அதை *லோங்கி* என்று அழைக்கிறார்கள். ஒவ்வொரு கலாச்சாரத்திலும் ஆண்கள் மற்றும் பெண்களின் ஆடைகள் வேறுபடுகின்றன. எனவே நமது கலாச்சாரப் புரிந்துகொள்ளுதலை நாம் வேதாகமத்தின்மீது திணிக்கக் கூடாது.

இறுதியாக, உபாகமம் 22:5 வசனத்தின் அடிப்படையில் பெண்கள் கால்சட்டை அணியக் கூடாது என்று சொல்லும் பலர் ஏன் தாங்கள் லேவியராகமம் 19:27 வசனத்தைப் பின்பற்றவில்லை என்று நான் வியப்படைகிறேன். அந்த வசனம் இப்படிச் சொல்லுகிறது:

> உங்கள் தலைமயிரைச் சுற்றி ஒதுக்காமலும், தாடியின் ஓரங்களைக் கத்திரிக்காமலும் (லேவி. 19:27).

எப்படி இந்த மனிதர்களால் லேவியராகமம் 19:27 வசனத்துக்கு விரோதமாகத் தேவனால் தங்களுக்குக் கொடுக்கப்பட்டதும், பெண் களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவதுமான தாடியை முழுவதுமாக மழித்துவிட்டு, கால்சட்டைகளை அணியும் பெண்கள் ஆண்களைப் போல இருக்கிறார்கள் என்று எப்படிக் குறைசொல்ல முடிகிறது? இது மாய்மாலமாகத் தோன்றவில்லையா?

லேவியராகமம் 19:27 வசனத்தில் தேவனுடைய நோக்கத்தைப் புரிந்துகொள்ளுவதற்கு ஒரு வரலாற்றுச் செய்தி உதவுகிறது. அந்நிய தேவர்களை வழிபட்டவர்கள் தங்கள் வழிபாட்டின் ஒரு சடங்காகத் தங்கள் தாடியின் ஓரங்களைக் கத்திரித்துக்கொண்டார்கள். தமது மக்கள்





விக்கிரகங்களை வழிபடுகிறவர்களைப்போலக் காணப்படுவதைத் தேவன் விரும்பவில்லை.

## பேசுவது யார்?

எந்தவொரு வேதாகமப் பகுதியிலும் பேசுவது யார் என்பதை நாம் எப்போதுமே கவனிக்க வேண்டும். இந்தப் பின்னணி விவரம் அந்தப் பகுதிக்கு அர்த்தம்காணுவதில் உதவியாக இருக்கும். வேதாமத்திலுள்ள எல்லாமே தூண்டுதலைப் பெற்று வேதாகமத்தில் இருந்தாலும், வேதாகமத்திலுள்ள எல்லாமே தேவனுடைய தூண்டுதல் பெற்ற வார்த்தை அல்ல. நான் சொல்லுவதின் அர்த்தம் என்னவென்று புரிகிறதா?

பல வேதாகமப் பகுதிகளில் மக்களின் தூண்டுதல் பெறாத வார்த்தைகளும் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன. எனவே வேதாகமத்தில் மக்கள் பேசும் எல்லாமே தேவனுடைய தூண்டுதலைப் பெற்றவை என்று நாம் நினைத்துக்கொள்ளக் கூடாது.

எடுத்துக்காட்டாக, சிலர் யோபின் வார்த்தைகளையும், அவனுடைய நண்பர்களின் வார்த்தைகளையும் தேவனுடைய ஏவுதல் பெற்ற வார்த்தைகளாக மேற்கோள் காட்டும் தவறைச் செய்கிறார்கள். ஏன் இது தவறு என்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. முதலாவதாக, யோபும் அவனுடைய நண்பர்களும் முப்பத்து நான்கு அதிகாரங்களுக்கு *விவாதித்தார்கள்*. அவர்கள் ஒருவர் சொன்னதை மற்றவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. எனவே அவர்கள் சொல்லியது எல்லாமே தேவனுடைய ஏவுதல் பெற்ற வார்த்தைகளாக இருக்க முடியாது. ஏனென்றால் தேவன் தமக்குத் தாமே முரண்பாடாகப் பேசுவதில்லை.

இரண்டாவதாக, புத்தகத்தின் இறுதியில் தேவன்தாமே பேசுகிறார். தவறான காரியங்களைச் சொன்னதற்காக அவர் யோபையும் அவனுடைய நண்பர்களையும் கடிந்துகொள்ளுகிறார் (பார்க்க, யோபு 38–42).

புதிய ஏற்பாட்டை வாசிக்கும்போதும், நாம் இதே முன்னெச்சரிக் கையுடன் வாசிக்க வேண்டும். பல இடங்களில் பவுல் தான் கூறியவை களில் சில பகுதிகள் தனது சொந்தக் கருத்துக்கள் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார் (பார்க்க, 1 கொரி. 7:12, 25–26, 40).

## யாரிடம் பேசப்படுகிறது?

ஒரு குறிப்பிட்ட வேதாகமப் பகுதியில் யார் பேசுவது என்று கேட்டுக்கொள்ளுவது மட்டுமின்றி, யாரிடம் பேசப்படுகிறது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். இல்லாவிட்டால் நமக்குப் பொருத்தமாக இராத ஒன்றை நமக்குப் பொருத்தமானதாக நாம்

நினைத்துக்கொள்ளுவோம். அல்லது நமக்குப் பொருத்தமில்லாத ஒன்றை நமக்குப் பொருத்தமானது என்று நினைத்துக்கொள்ளுவோம்.

எடுத்துக்காட்டாக, சிலர் 37ஆம் சங்கீதத்திலுள்ள ஒரு வாக்குத் தத்தத்தைத் தங்களுக்குரியதாக உரிமையாக்கிக்கொள்ளுகிறார்கள்:

> அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார் [சங். 37:4].

ஆனால் இந்த வாக்குத்தத்தம் இதை வாசிக்கும் எல்லோருக்கும் பொருத்தமானதாக இருக்கிறதா? இல்லை, இதன் பின்னணியை நாம் வாசிப்போமானால், ஐந்து நிபந்தனைகளை நிறைவேற்றும் சிலருக்கு மட்டுமே அது பொருத்தமானது என்பதைக் கண்டுகொள்ளுவோம்:

> கர்த்தரை நம்பி நன்மை செய்; தேசத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்துகொள். கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார் [சங். 37:3–4].

எனவே யாருக்கு அது சொல்லப்படுகிறது என்பது எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் அறிகிறோம்.

இதோ மற்றொரு எடுத்துக்காட்டு:

> அப்பொழுது பேதுரு அவரை [இயேசுவை] நோக்கி: இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே, என்று சொல்லத் தொடங்கினான். அதற்கு இயேசு பிரதியுத்தரமாக: என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும், வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும், இப்பொழுது இம்மையிலே, துன்பங்களோடேகூட நூறத்தனையாக, வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்தியஜீவனையும் அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் [மாற்கு 10:28–30].

சில வட்டாரங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் ஒருவரை ஆதரிக்கும்படி காணிக்கை கொடுக்கும்போது ''நூறத்தனையாகத் திரும்பப் பெறுவதாக'' உரிமையாக்கிக்கொள்ளுவது வழக்கமாக இருக்கிறது. ஆனால் இந்த வாக்குத்தத்தம் இப்படிப்பட்ட மக்களுக்கு உரியதாகுமா? இல்லை, பேதுருவைப்போல சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி மெய்யாகவே தங்கள் வீட்டையும், குடும்பங்களையும் விட்டுவிட்டு வருகிறவர்களுக்கே இந்த வாக்குத்தத்தம் உரியதாகும்.





மற்றொரு சுவாரசியமான காரியம் என்னவென்றால், ''நூறத்தனையாகத் திரும்பக் கிடைக்கும்'' என்பதைக் குறித்துப் பிரசங்கிக்கும் பலர் வீடுகளையும் நிலங்களையும் பற்றி மட்டுமே நினைக்கிறார்கள், பிள்ளைகளையும் துன்பங்களையும் பற்றி நினைப்பதில்லை. உண்மையில் தங்கள் வீட்டைவிட்டு வருகிறவர்கள் நூறு வீடுகளைப் பெறுவார்கள் என்று இயேசுவானவர் வாக்குத்தத்தம் செய்யவில்லை. அவர்கள் தங்கள் வீடுகளையும் குடும்பங்களையும் விட்டுவரும்போது, அவர்களுடைய புதிய ஆவிக்குரிய குடும்பங்களின் உறுப்பினர்கள் தங்குவதற்காகத் தங்கள் வீடுகளைத் திறந்து கொடுப்பார்கள் என்றே அவர் குறிப்பிட்டார். மெய்யான சீஷர்கள் சொத்தைப் பற்றி அக்கறை கொள்ளுவதில்லை, ஏனென்றால் அவர்களுக்கு எதுவும் சொந்தமில்லை – அவர்கள் தேவனுடைய உடைமைகளுக்கு உக்கிராணிகளாக மட்டுமே இருக்கிறார்கள்.

## ஒரு இறுதியான எடுத்துக்காட்டு

மத்தேயு 24–25 அதிகாரங்களில் காணப்படும் இயேசுவானவரின் ஒலிவ மலைச் சொற்பொழிவை மக்கள் வாசிக்கும்போது, சிலர் இரட்சிக்கப்படாத மக்களுக்கே அவர் இவைகளைச் சொல்லியிருக்கிறார் என்று தவறாக நினைத்து, அவைகளின்படி தாங்கள் செய்ய வேண்டியதில்லை என்ற தவறான முடிவுக்கு வருகிறார்கள். உண்மையில்லாத வேலைக்காரன், பத்துக் கன்னிகைகளைக் குறித்த உவமைக் கதைகளை வாசித்துவிட்டு, அவை அவிசுவாசிகளுக்குச் சொல்லப்பட்டன என்று சொல்லுகிறார்கள். ஆனால் நான் ஏற்கெனவே சொல்லியபடி, இந்த உவமைக்கதைகள் இயேசுவின் சில நெருக்கமான நண்பர்களுக்காகச் சொல்லப்பட்டன [பார்க்க, மத். 24:3; மாற்கு 13:3]. இயேசுவானவர் வரும்போது பேதுருவும், யாக்கோபும், யோவானும், அந்திரேயாவும் ஆயத்தமில்லாமல் இருக்கக்கூடும் என்று அவர்களுக்கு எச்சரிப்புக் கொடுக்கப்பட்டிருக்குமானால் அந்த எச்சரிப்பு நமக்கும் உரியதாகும். இயேசுவின் ஒலிவ மலைச் சொற்பொழிவிலுள்ள எச்சரிப்புகளும் விசுவாசிகளுக்கு உரியவையாகும். இயேசுவானவர் யாரிடம் இதைச் சொல்லுகிறார் என்று கவனிக்கத் தவறியவர்களுக்கும் இது உரியதாகும்.

### விதி × 3: நேர்மையோடு வாசியுங்கள். ஒரு வேதாகமப் பகுதிக்குள் உங்கள் இறையியலைத் திணிக்காதீர்கள். உங்கள் விசுவாசத்துக்கு முரண்பாடாக இருக்கும் ஒன்றை நீங்கள் வாசிப்பீர்களானால், வேதாகமத்தை மாற்ற முயலாதீர்கள், நீங்கள் விசுவாசிப்பதை மாற்றுங்கள்.

ஏற்கெனவே மனதில் கொண்டிருக்கும் பட்சபாதங்களுடன்தான் நாம் ஒவ்வொருவரும் வேதவசனங்களை அணுகுகிறோம். இதன்

காரணமாக, நம்மால் பெரும்பாலும் வேதாகமத்தை நேர்மையோடு வாசிக்க முடியாமல் போகிறது. இறுதியில் வேதாகமம் நமது இறையியலை வடிவமைக்க அனுமதியாமல், நாம் நமது நம்பிக்கைகளை வேதவசனத்தில் திணிக்கிறோம். சில வேளைகளில் நமது கோட்பாடுகளுக்குப் பொருத்தமான வசனங்களைத் தேடுகிறோம், நமது நம்பிக்கைகளுக்கு முரண்பாடானவைகளைப் புறக்கணிக்கிறோம்.

ஒரு வேதாகமப் பகுதியில் இறையியலைப் பலவந்தமாகத் திணிப்பதற்குச் சமீபத்தில் நான் ஒரு எடுத்துக்காட்டைக் கண்டேன். ஒரு உபதேசியார் முதலில் இயேசுவின் பிரபலமான வசனங்களாகிய மத்தேயு 11:28–29 வசனங்களை வாசித்தார்:

> வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் (மத். 11:28–29).

இயேசுவானவர் இரண்டு *வெவ்வேறான இளைப்பாறுதல்களைக்* கொடுக்கிறார் என்று அந்த உபதேசியார் போதித்தார். முதலாவது இளைப்பாறுதல் 11:28 வசனத்திலுள்ள இரட்சிப்பின் இளைப்பாறுதல், இரண்டாவது 29ஆம் வசனத்திலுள்ள சீஷத்துவத்தின் இளைப்பாறுதலாகும் என்று அவர் கூறினார். இயேசுவிடம் வருவதின்மூலம் முதலாவது இளைப்பாறுதலைப் பெற்றுக்கொள்ளுகிறோம். ஆண்டவராக அவரை ஏற்றுக்கொள்ளுவதின் மூலம் அல்லது அவருடைய நுகத்தை ஏற்றுக்கொள்ளுவதின்மூலம் இரண்டாவது இளைப்பாறுதலைப் பெறுகிறோம்.

ஆனால் இயேசுவானவர் நோக்கம்கொண்ட அர்த்தம் இதுவாகுமா? இல்லை, இது ஒரு வேதாகமப்பகுதியில் பலவந்தமாக அர்த்தத்தைத் திணிப்பதாகும். தாம் இரண்டு இளைப்பாறுதல்களைக் கொடுப்பதாக இயேசு சொல்லவில்லை. வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களுக்கு அவர் ஒரே இளைப்பாறுதலைக் கொடுக்கிறார். இயேசுவின் நுகத்தை ஏற்றுக்கொள்ளுவதே, அதாவது அவருக்குக் கீழ்ப்படிவதே அந்த ஒரே இவைப்பாறுதலைப் பெறுவதற்கான ஒரே வழியாகும். இதுவே இயேசு கூறியதின் தெளிவான அர்த்தமாகும்.

அந்த உபதேசியார் ஏன் இப்படிப்பட்ட அர்த்தத்தைக் கூறினார்? பரலோகத்துக்குச் செல்லும் கிறிஸ்தவர்களில் இரண்டு வகைப்பட்டவர்கள் – விசுவாசிகள் மற்றும் சீஷர்கள் என்று அவர் நம்பியபடியால் நேர்மையில்லாத வகையில் இந்தப் பகுதிக்கு அர்த்தம் கண்டிருக்கிறார்.





ஏற்கெனவே நாம் இந்தப் புத்தகத்தில் பார்த்தபடி, அந்த உபதேசியாரின் அர்த்தம் காணுதல் இயேசு போதித்த பிற காரியங்களுக்கு ஒத்துப் போகவில்லை. புதிய ஏற்பாட்டில் எங்கேயும் விசுவாசிகள், சீஷர்கள் என்று இரண்டு வகைப்பட்ட கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லப்படவில்லை. மெய்யான விசுவாசிகள் எல்லோரும் சீஷர்களாக இருக்கிறார்கள். சீஷர்களாக இல்லாதவர்கள் விசுவாசிகள் இல்லை. சீஷத்துவம் மெய்யான விசுவாசத்தின் கனியாக இருக்கிறது.

தூய இருதயத்தோடு நாம் வேதாகமத்தை நேர்மையாக வாசிப்போமாக. அப்போது கிறிஸ்துவுக்குப் பயபக்தியுடன் கீழ்ப்படிவோம்.

